Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (28.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 336

# இங்கு பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அமெ. உதவியை நாடுகின்றது இலங்கை

## விரைவில் அது தொடர்பான ஒப்பந்தம் செய்வதற்கு அமைச்சரவையில் முடிவு

கொழும்பு, ஒக்ரோபர் 28

**இலங்கையில் பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப் படுத்துவதற்கு அமெரிக்காவின் உதவிகள் பெறப்படும். இது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று அதிவிரைவில் கைச்சாத் திடப்படும். இதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அமைச்சரவை வழங்கியுள்ளது.**

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனை நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், சட்டம், ஒழுங்குகள், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க அமெரிக்க உதவி பெறுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அமைச் சரவையில் சமர்ப்பித்தார்.

நாட்டில் அன்றாடம் பயங்கரவாதச் செயல் களும், சட்டவிரோதச் செயல்களும் அதிக ரித்து வருகின்றன. இது பொது மக்களின் பாது காப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந் துள்ளது.

எனவே, பயங்கரவாதச் செயல்களை முறியடிக்கும் தகைமையுடைய பொலீஸ்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பிரதேச மக்களின் வாக்குரிமையை தடுக்கும் உத்தரவை விடுக்க நீதிமன்றம் மறுப்பு

### ரணிலின் இடையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது

கொழும்பு, ஒக்.28

அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத தமிழர் தாயகப்பிரதேச மக்களுக்கு எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங் கப்படக்கூடாது எனக்கோரி தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், அவை தொடர்பாக இடைக்காலத் தடை எதுவும் விதிக்க மறுத்துவிட்டது.

மேற்படி பிரதேச மக்களும் சுதந்திரமாக வாக்களிக்கவும், அங்கு நீதியான தேர்தலை நடத்தவும் தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் எடுக்கவேண்டும் எனத் தெரிவித்த உயர்நீதிமன்றம், அது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருக்கு உத் தரவு எதையும் வழங்க மறுத்துவிட்டது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி சார்பில் போட்டியிடும் நெல்ஸன் பெரேரா மற்றும் ஸ்ரீலங்கா தேசிய முன்னணியின் தலைவர் விமல் கீகனகே ஆகி யோர் மேற்படி அடிப்படை உரிமை மீறல்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பேசித் தீர்க்க விரும்புகிறாராம் மஹிந்த

கொழும்பு, ஒக்.28

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் எழுந்திருக் கும் முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வது பற்றிப் பேசுவதற்காக பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, கட்சித் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவிடம் நேர அனுமதி யைக் கோரினாலும் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிய

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத் தேசிய கீதத்தை உருவாக்க புலிகள் அழைப்பு

தமிழீழத்துக்கான தேசிய கீதம் (பண்) உருவாக்கப்படவுள்ளது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அதற்காக தமிழீழத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற தமி ழர்களி டம் இருந்தும் பண்களை அவர்கள் கோரி இருக்கின்றனர்.

இது குறித்து புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரனின்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவின் கருத்துக்கு சந்திரிகா அதிருப்தி!

கொழும்பு, ஒக்.28

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலையொட்டி முன்வைத்திருக்கும் 'மஹிந்தவின் சிந்தனை' என்ற தேர்தல் விஞ் ஞாபனம் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் தான் வெளியிடப்பட்டது என மூத்த அமைச் சர்கள் கூறிவருவது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் அதிருப்தி கொண்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மீண்டும் திரண்டு தமிழ் மக்கள் உரிமைமுழக்கம்

வவுனியா, ஒக்.28

தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு இரண்டா வது முறையாகவும் வவுனியாவில் எழுச்சியு டன் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று திரண்டு தமது அபிலாஷை களை சர்வதேசத்திற்கு உரத்த கோஷத் துடன் வெளிப்படுத்தினர்.

மாலை 3.30 மணிக்கு ஆரம்பமான நிகழ் வில் வவுனியா மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களில் இருந்தும் வந்த ஆயிரக்கணக் கான மக்கள் பெரும் எழுச்சியுடன் உரிமை முழக்கமிட்டனர். விடுதலைப் புலிகளின் கட் டுப்பாட்டுப் பகுதியில் இருந்தும் பெரு மளவான மக்கள் அழைத்து வரப்பட்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் 15 பேரும் வவுனியா

(18 ஆம் பக்கம் பார்க்க)




(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## திருமலையில் இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஒக்.28

திருமலை, உவர்மலை, கோணேசபுரம் என் னும் இடத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் நேற்றுக் முற்பகல் 10.30 மணியளவில் இனந்தெரியா தோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சிங்களவரான அனுர (வயது- 29) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார். இந்த இளைஞர் திருமலை மடத்தடியில் ஓட்டோ சாரதியாகத் தொழில் புரிபவர். இவரின் ஓட்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாகரனின் படத்துடன்

## யாழிலிருந்து சென்ற இளைஞர்கள் ஓமந்தை தாண்ட படையினர் தடை

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்வதற் காக யாழ்ப்பாணத்தில் இருந்து சைக்கிள்களில் சென்ற சுமார் 50 இளைஞர்களை ஓமந்தை சோதனைச் சாவடியைத் தாண்டிச் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை.

வடமராட்சியில் இருந்து சைக்கிள்களில்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தென்இந்தியாவில் தொடர்மழை: 150 இற்கும் மேற்பட்டோர் பலி!

இந்தியாவின் தென்மாநிலங்களில் கடந்த ஐந்து நாள்களாகப் பெய்துவரும் கடும் மழைக்கு 150இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இடைவிடாது தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தமிழ் நாட்டில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. விமான சேவைகள் உட்பட போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இடி மின்னல் தாக்கியும், அறுந்துவீழ்ந்த மின்சாரக்கம்பிகளில் சிக்கியும் 150இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தெரிய

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்து எம்நிலையை உலகுக்கு உரைப்போம்

### உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமைப்பு அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஒக்.28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக் கள் பகிஷ்கரித்து, சிங்களத் தலைவர்களை இனியும் நாம் நம்பத் தயாரில்லை என்பதை சர்வ தேசத்துக்கு எடுத்துரைப்போம் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்.

இதுகுறித்து அந்த அமைப்பு நேற்று வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :-

ஸ்ரீலங்காவின் ஆட்சித் தலைவருக்கான போட்டியில் 13 பேர் களத்திலுள்ளபோதும் பிரதான போட்டியாளர்கள் - ஆட்சிக் கதிரையை பிடிக்கப் போகின்றவர்கள் இருவர் மட்டுமே.

இவர்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிப் படையாகவே பேரினவாத முகத்தை வெளிக் காட்ட வேண்டிய அவசியம் அவரின் கூட்டணித் தோழர்களால் ஏற்பட்டுள்ளது. ஒற்றையாட்சி முறை, தமிழர் தாயகமென ஒன்றில்லை, ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்ட மைப்பும் நிராகரிப்பு இவையே அவர்களின் கொள்கை. விடுதலை வேட்கையோடு நிற்கும் தமிழர் தேசம் மஹிந்தவின் இந்தக் கொள்கை களுக்கு ஆதரவாக வாக்களிக்க முடியுமா?

(18 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வி-01 ரக உரத்தின் விலை நிர்ணயம்

கிளிநொச்சி,ஒக்.28

சி.ஐ.சி. நிறுவனத்தின் வி-01 ரக உரத்தின் ஆகக் கூடிய விற்பனை விலையாக 50 கிலோவிற்கு ஆயிரத்து 740 ரூபாவைத் தீர்மானித்துள்ளதாக தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மேற்படி விலையிலேயே உர விற்பனையை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட வேளாண் இடுபொருள் வாணிப நிலைய உரிமையாளர்களுக்கு விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி கேட்டுள்ளது.

(ஒ-202)

## சிகை அலங்கரிப்பு நிலையங்களை திறப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.28

தீபாவளியை முன்னிட்டு சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களின் உரிமையாளர்களும் இன்று வெள்ளிக்கிழமையில் இருந்து தமது விருப்பத்துக்கு இணங்க அலங்கரிப்பு நிலையங்களைத் திறந்து பூட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

ஞாயிற்றுக்கிழமையும் அலங்கரிப்பு நிலையத்தைத் திறக்க முடியும் என்றும் - யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (எ)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.28

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் இலங்கை ஆசிரிய சேவை 3 - II வகுப்பைச் சேர்ந்த தமிழ் மொழிமூல ஆங்கில ஆசிரியர் ஆள் சேர்ப்பு நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியும் நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரை யாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-13-31)

## ஒற்றுமை வேண்டி துஆ பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஒக்.28

இந்த நாட்டு மக்களின் விமோசனத்திற்காகவும் சமூகங்களுக்கிடையிலான சகோதரத்துவம், சமத்துவம் வேண்டியும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மஹம் மதியா ஜும்ஆ பள்ளிவாசலில் விசேட துஆ பிரார்த்தனை ஒன்று நடைபெறவுள்ளது.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இன்று 15 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி இந்தப் பிரார்த்தனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த)

## விருது வழங்கும் நிகழ்வு இன்று .

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறையின் 2004ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் கலந்துகொள்ளவுள்ளார். 2004ஆம் ஆண்டு விளையாட்டுத்துறையில் திறமைகளினை வெளிக்காட்டிய 102 வீர வீராங்கனைகள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(3-190)

## ஆசிரியர் பயிற்சியின் நிறைவுநாள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.28

சர்வதேச கல்வியகம், ஜப்பான் ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரிய சங்கங்களின் ஒன்றியம் ஆகியன இணைந்து ஆசிரியர்களுக்கு உளநல சமூக உதவியாளர்களாகப் பயிற்சியளித்து வருகின்றது.

பயிற்சியின் நிறைவுநாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி ச. ஜெயராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

(த-202)

## வவுனியா எழுச்சிநிகழ்வு பதிவுகள்




தேசியத் தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி



ஈகச்சுடர் ஏற்றப்படுகின்றது



அகவணக்கத்தின் போது...




தேசியக்கொடி ஏற்றும்போது





கலந்துகொண்ட பிரமுகர்கள்



தேசியத் தலைவரின் படத்துடன்



கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

## சாரணர் கிளைச் சங்க ஆண்டு விழா நிகழ்வு

வடமராட்சி,ஒக்.28

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் வருடாந்த சாரணர் திறனாய்வு அணியும் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(த-173-202)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலிக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஆசிரியர் மு.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## சிறுவர் இல்லப் பொறுப்பாளர்களுக்கு நீதிமன்றில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.28

சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிறுவர் இல்லங்கள் தொடர்பான நடைமுறைகள், முறைப்பாடுகள் என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால், யாழ். நீதி நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், நன்னடத்தை அதிகாரிகள், சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலர்கள், சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள் ஆகியோரைத் தவறாது சமூகம் தருமாறு யாழ். நீதிவான், நீதிமன்றப் பதிவாளர் க.மீரா கேட்டுள்ளார்.

(த-7)

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.28

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற மூன்று அலுவலர்களுக்கான பாராட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரிச் சங்கத் தலைவரும், உதவி அரச அதிபருமான க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற க.ஸ்ரீபதி, எழுதுவினராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி கிருஷாந்தி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி வாகினி ஆகியோர் பாராட்டிக்கௌரவிக்கப்படுவர்.(எ)

## ஆதிகோவிலடியில் 15 வீடுகள் படையினரால் கையளிப்பு!

வடமராட்சி,ஒக்.28

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் இராணுவத்தினர் நிலைகொண்டிந்த சுமார் 15 வீடுகள் நேற்றையதினம் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

524ஆவது படைத்தளபதி (வடமராட்சி) பிரிகேடியர் பன்னவெவ ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி எஸ்.இந்திரராஜாவிடம் அப்பகுதி மக்கள் முன்னிலையில் இவ்வீடுகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கையளித்தார்.

கடந்த 1996ஆம் ஆண்டு படையினர் வடமராட்சியைக் கைப்பற்றியபோது இவ்வீடுகளைத் தமது பாவனைக்காக ஆக்கிரமித்துக் கொண்டனர்.

நேற்றையதினம் இவ்வீடுகளிலிருந்து அவர்கள் வெளியேறினார்கள். படையினர் இந்த வீடுகளைக் கையளிக்கும்போது அவற்றின் கதவுகள் யன்னல்கள் எவையும் இருக்கவில்லை. கடற்றொழிலாளர் சங்கப் பிரதிகள் இது குறித்து பிரிகேடியரிடம் கேட்டபோது, இவ்வீடுகள் பொறுப்பேற்கப்பட்டபின்னர் பல அதிகாரிகள் கடமைக்குவந்து சென்றுள்ளனர். ஆதலால், இதற்கு என்னால் எதுவுமே செய்யமுடியாது. இருப்பினும் விவரங்களைத் தந்தால் இவ்வீடுகளில் படையினர் தங்கியிருந்தகாலங்களுக்கு வாடகைப்பணம் பெற்றுத்தரமுடியும். அதற்கு இவ்வீடுகளின் உறுதிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என பிரிகேடியர் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.(த-173)

## நாவலர் மண்டபத்தில் சேதுகாண்பிய கருத்துரை

யாழ்ப்பாணம்,ஒக்.28

சேதுகாண்பியப் பண்பாட்டிற்கான கற்கைப்புலம் ஏற்பாடுசெய்துள்ள கருத்துரை நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் காண்பியக் கலைகளில் நடனமும் 'பால்நிலை இடைவெளி' என்ற பொருளில் பேராசிரியர் பொ.இரகுபதி கருத்துரை நிகழ்த்துவார். (எ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இலங்கையில் நீதி முறைமை

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடாது எனக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம் அதில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று உத்தரவிடுவதற்கு மறுத்துவிட்டது.

அப்பிரதேச மக்களுக்கும் - அதாவது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்கும் - வாக்களிப்பதற்கு உரிய வாய்ப்புகளை வழங்கவும், நீதியும் நியாயமுமான தேர்தல்களை நடத்தவும் தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பிரதம நீதியரசர் உட்பட மூன்று நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. அந்த மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து அங்கு அவர்களுக்கென விசேடமாக அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச்சாவடிகளில் தமது வாக்குகளை அளிப்பதற்கான விசேட ஏற்பாடுகளைத் தேர்தல் ஆணையாளர் செய்திருந்தார். சட்டப்படியான ஒழுங்குகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. தேர்தல் அதிகாரிகளும் வாக்குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுகள், வாக்காளர் பட்டியல்கள் போன்றவற்றோடு வாக்குச்சாவடியில் வாக்காளர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால், புலிகளின் பிரதேசத்தைச் சேர்ந்த வாக்காளர்களால் தமது வாக்களிப்பு நிலையங்களுக்கு வரமுடியவில்லை.

எல்லாவற்றுக்கும் இராணுவம் செய்த வேலைதான் காரணம். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வாக்காளர்கள் வருவதற்கான பாதை எல்லாவற்றையும் தேர்தல் தினத்தன்று மூடி அடைத்து விட்டது இராணுவம். அதனால், அந்த வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

ஆனால், இதற்காக அப்போதைய இராணுவத் தளபதியை கடுமையாகக் கண்டித்திருந்தது உயர் நீதிமன்றம். இவ்விடயத்தை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்த ஐந்து மனுதாரர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாப்படி தண்டம் செலுத்தவும் இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதுமட்டுமல்ல, அவ்வாறு வாக்குரிமையைப் பறிக்கும் அடிப்படை மனித உரிமை மீறல் செயற்பாட்டில் ஈடுபட்டதால் - அதற்கான குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டதால் - அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல, இராணுவச் சேவையிலிருந்து ஒய்வு பெற்ற பின்னரும் இராஜதந்திரப்பதவி எதையும் பெற முடியாதவராக அந்தரிக்கின்றார். அவருக்கு எதிரான - மனித உரிமை மீறல் தொடர்பான - குற்றத்தீர்ப்பே அவரை உய்ய விடாமல் கட்டுப்படுத்தி நிற்கின்றது.

இப்படி புலிகளின் பிரதேச வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறிக்கமுடியாது - பறிக்கக்கூடாது - என்ற திட்டவட்டமான தீர்ப்பு இலங்கையின் அதி உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருக்கையில், அந்தத் தீர்ப்பால் உறுதிப்படுத்தப்பட்ட வாக்குரிமையைப் பறிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் இருவர் மனுச்செய்யும் நிலை எப்படி நேர்ந்தது? தம்பாட்டில் - சட்ட அறிவின்றி - அவர்கள் அப்படித் தாக்கல் செய்தனரா?

தமிழர் தாயகப் பிரதேச மக்களின் வாக்குரிமையைப் பறிக்கக்கூடாது என்று ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் வழிகாட்டுத் தீர்ப்பு இருப்பதால் அதை மாற்றமுடியாதுதானே என்ற உறுதிப்பாட்டில் இருக்காமல் - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முதல் மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம்வரை முக்கிய பல தரப்புகள் விழுந்தடித்துக்கொண்டு ஓடி, இந்த விடயத்தில் தங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி கோரி, இடையீட்டு மனுத்தாக்கல் செய்து, தமிழர் தாயகப் பிரதேச மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டது ஏன்?

நீதிமன்றங்களின் தீர்ப்பையும் உத்தரவுகளையும் விமர்சிக்கமுடியாது, விமர்சிக்கக் கூடாது என்ற அடிப்படைகளை காவலரணாக வைத்துக்கொண்டு இலங்கைத் தீவில் அரங்கேறும் தப்புகளும், தவறுகளும் மக்கள் மனதிலும் அரசியல் தலைவர்கள் மனதிலும் ஏற்படுத்தியிருக்கும் கிலேசமும், அவநம்பிக்கையும், அச்சமுமே இதுபோன்ற விவகாரங்களில் இப்படி பல தரப்பிலும் பதற்றத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன.

நீதியாளர் ஒருவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்படும் வழக்கில் அந்த நீதியாளரே நீதிபதியாக இருந்து, தனக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவருக்கே சிறைத் தீர்ப்பு வழங்கும் 'அபூர்வ நீதி' இந்த இலங்கை மண்ணில்தான் இடம்பெற்றுள்ளது.

கொங்ஹொங்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஆசிய சட்டவள நிலையம் இலங்கைப் பாதுகாப்புத்துறை மேற்கொள்ளும் சித்திரவதைகள், அராஜகங்கள், வன்செயல்கள் குறித்து கண்டனம் தெரிவித்து சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் நீதிபரிபாலனப் போக்குக் குறித்தும் காட்டமாக விமர்சித்திருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

எப்படியோ, இப்போதைய விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றது என்ற மன நிம்மதி - ஆறுதல் - மனித உரிமை ஆர்வலர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அப்படி இல்லாத ஒரு தீர்ப்பு வந்திருந்தாலும் கூட தமிழர்களைப் பொறுத்தவரை அது சாதகமானதுதான்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உயர்நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டால் அந்தப் பிரதேசம் இலங்கை அரசுக்கு உட்படாத தனிநாடு என்பதை உயர்நீதிமன்றமே அங்கீகரித்ததாகிவிடும் என்று அரசியல் தலைவர்களும், சட்ட அறிஞர்களும் எச்சரித்தமை கவனிக்கத்தக்கது.

# பனை தறிக்க அனுமதிக்கும் அதிகாரம் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வசம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். குடாநாட்டில் பனைமரம் தறிப்பதற்கான அனுமதியை பொதுமக்களுக்கு வழங்கும் அதிகாரத்தைப் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பேற்றுக்கொள்வதாக யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சமாசத்தினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் பனைமரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்படுவதால் பனைவளம் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் குடாநாடு பாலைவனமாகும் அபாயம் எதிர்கொள்ளப்படுகிறது. பனைவளம் அழிவதைத் தடுத்திநிறுத்தி முக்கிய தேவைகளுக்கு மட்டும் பனைமரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும் பொறுப்பு யாழ்.குடாநாட்டில் இயங்கும் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. எதிர்வரும் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருகின்றது.

தமது சொந்தத் தேவைகளுக்குத் தங்கள் சொந்தப் பனைமரங்களைப் பயன்படுத்த விரும்புவோர் கீழ்க்காணும் நடைமுறைகளுக்கு ஏற்ப விவரங்களை உறுதிப்படுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்த நடைமுறைகள் வருமாறு:-

அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள பனை அபிவிருத்தி சங்கங்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனை முழுமையாகப் பூர்த்தி செய்துகொடுத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே மரங்கள் தறிக்கப்படவேண்டும்.

தறிக்கப்படும் மரங்களை வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதானால் சங்கத்திடம் அனுமதிக் கடிதம் பெற்று மரக் கூட்டுத்தாபனத்தில் கொடுத்து அனுமதிபெறல் வேண்டும்.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமையாமல் தறிக்கப்படும் அல்லது எடுத்துச் செல்லப்படும் பனை மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு முறைகேடான செயல் எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

பனைவளத்தை அழியவிடாது பாதுகாக்கவேண்டும் எனக்கருதும் அபிமானிகள், ஆதரவாளர்கள், சூழலியலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அக்கறையோடு செயற்பட்டு மேற்குறித்த நடைமுறைகளைப் பேண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தொற்றுநோய்கள் பரவ விடாது தடுக்க உணவகங்கள் பின்பற்றவேண்டிய விதிகள்

## தமிழீழ சுகாதார சேவை அறிவுறுத்து

கிளிநொச்சி,ஒக்.28

மழை காலத்தில் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக உணவுச்சாலை, தேநீர்ச்சாலை, குளிர்பானநிலையம், ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் ஆகியவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

உண்ணும் பொருள்களை விற்கும் நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வருமாறு:-

* மலம் கழிப்பதற்கு மலசலகூடங்களை மட்டும் பாவிக்கவேண்டும்.
* மலம் கழித்தபின் உணவு சமைக்க முன், உணவு உண்ணமுன் சவர்க்காரம் இட்டு கைகளை நன்கு கழுவவும்.
* பச்சையாக உண்ணும் உணவு வகைகளை (வல்லாரை, கரட் சம்பல்) தயாரித்தல், விற்பனை செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
* கொதித்தாறிய குடிதண்ணீர் நிலையத்தில் போதியளவு இருத்தல் வேண்டும்
* நுகர்வோருக்கு கொதித்தாறிய நீர் வழங்கப்படல் வேண்டும்.
* பணியாளர், உரிமையாளர் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
* சமைத்த உணவுகளை ஈ மொய்க்காதவாறு பாதுகாப்பான அலுமாரியில் மூடிவைத்தல் வேண்டும்.
* சுற்றாடலில் நீர் தேங்காதவாறு இருத்தல் வேண்டும்.
* இயன்றளவு உடன் சமைத்த உணவுகளை வழங்கவேண்டும்.
* திண்ம, திரவக் கழிவுகளைத் தகுந்த முறையில் பாதுகாத்து உரிய முறையில் இறுதியகற்றல் மேற்கொள்ளல் வேண்டும்.
* தொற்றுநோய் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலை சென்று பூரண சிகிச்சை பெற வேண்டும்.

- மேற்கண்ட நடைமுறைகளே அறிவிக்கப்பட்டுள்ளன.

(ஒ)

### நாளை

ஐப்பசி 11
சனிக்கிழமை
29.10.2005
திதி: துவாதசி
பின்னிரவு : 05.12 வரை
நட்சத்திரம் : பூசம்
முற்பகல் 10.02
சுபநேரம்: 03.03 - 04.33
ராகுகாலம்: 09.03 - 10.33
(யாவும் பழைய நேரப்படி)

# மாவீரர்களின் திருவுருவப் படங்களை அக்கறையுடன் பேண வேண்டுகோள்

கொழும்புத்துறை,ஒக்.28

தாயக விடுதலைக்கு தற்கொடை ஈந்த மாவீரர்களது திருவுருவப் படங்களை அதிகஅக்கறையுடன் பேணிப் பாதுகாக்கும்படி மாவீரர்களின் குடும்பங்கள், உரித்துடையோர் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உறுதிசெய்யப்பட்ட பொறுப்புடையவர்களிடம் தவிர வேறு எவரிடமும் மாவீரரது படங்களை எக்காரணம் கொண்டும் கொடுக்கவேண்டாம் . வேறு எவரும் இப்படங்களைப் பெற்றுச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மாவீரர் தினங்களில் மாவீரர் குடும்பத்தினரிடமிருந்து திருவுருப் படங்களைப் பெற்றுச் சென்றவர்களில் சிலர் அவற்றை அக்கறையுடன் பேணவில்லை என்று எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த அக்கறையீனத்தால் மாவீரர்களின் அரிதான புகைப்படங்கள் பழுதடைந்து போயின. மேலும் சில காணாமற்போய் விட்டன.

இதனால் மாவீரர்களின் பெற்றோர் பலரும் தமது பிள்ளைகளின் புகைப் படங்கள் ஒன்றுகூட இல்லாத நிலையில் மனவேதனை அடைந்துள்ளனர்.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு தெளிவுடன் அனைவரும் செயற்பட்டு மாவீரர் புகழ் காப்போம்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-30)

### உதயவாக்கு

எண்ணியபடி உதவி செய்ய வேண்டுமென்று உறுதி இல்லாத போது இரக்கம் பயன்படுவதே இல்லை.

- மு.வ.



## 26.10.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200707851 இலிருந்து 200724491 வரை

சீட்டிழுப்பு இல. 1653

வெற்றி எண்கள்

**14 46 49 69** சுப்பர் எண் **07**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.96,31,900/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 96,31,900/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 413 | 1,000/- | 4,13,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,400 | 500/- | 7,00,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,749 | 40/- | 8,29,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,718 | 20/- | 3,94,360/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,95,919 | 10/- | 29,59,190/- |
| | | மொத்தம் | 74,61,510/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 79,61,510/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,04,22,200/-**

தொடர் இல. 300673541 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 29 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ரூபா 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 200715722-2-30 |
| காலி | 200717362-3-29 |
| இரத்தினபுரி | 200720242-6-41 |
| அனுராதபுரம் | 200720763-8-52 |
| கொழும்பு | 200719528-6-75 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,செஸ் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள்
13ஆம் நாள் (30.10.2005)ஞாயிற்றுக்கிழமை
பகல் 12.15 மணிமுதல் 01.35 மணிவரையுள்ள அத்த நட்சத்திர சுபவேளையில்,

எமது ஏக புத்திரன்
திருநிறைசெல்வன்
**வாகீசன்** (கண்ணன்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**சுபாஷினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு
**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில்**
திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி விசுவலிங்கம் (மானிப்பாய்),
திருமதி நிர்மலா (தாதிய உத்தியோகத்தர் மந்திகை),
திருமதி மீனா குணநாதன் (கொழும்பு),
திரு.திருமதி றஞ்சி இரத்தினசிங்கம் (பாறின்),
திரு.திருமதி திலகவதி யோகநாதன் (மானிப்பாய்),
இணுவில் வீதி, மானிப்பாய்.

திரு.திருமதி செ.கோபாலகிருஷ்ணன் குடும்பத்தினர்.
காளி கோயிலடி,
சங்கானை.

வரவேற்பாளர்:
சபாரட்ணம் குடும்பம், கனகராஜா குடும்பம்
கந்தையா குடும்பம்.

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(42052) (24)

**மணமகள் வீட்டார் அழைப்பு**
அன்பளிப்புகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பனசொனிக் பக்ஸ் மிசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சு.கமல், இணுவில். T.P. 021-222-7788 (42039)

### காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S. வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P. 011 2597183, 011 5364293. (சி-45692)

### இலவசம்

வீடு உடைத்த கல் தூள்கள் இலவசமாக வழங்கப்படும். தொடர்பு: 52/1, பிரதான வீதி, சுண்டுக்குளி (கீன் இன் அருகில்) (42006)

### தவறிவிட்டது

முருகேசு நாககுமரா என்பவரது தேசிய அடையாள அட்டை (743184513), இராணுவ அடையாள அட்டை என்பன 20.10.2005 வியாழக்கிழமை சத்திரச்சந்திப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 106, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 0776624516, 0779063008. (42017)

GY 8623 என்ற வாகன இலக்கத்தகடு சில நாள்களுக்கு முன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 021-2226242 என்ற இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (45962)

### வாடகைக்குண்டு

அலுவலகத்துக்கு ஏற்ற பெரியவீடும் வாகனத்தரிப்பிட வசதியும் கொண்டதாக நெல்லியடியில் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு 0776648751, 0714871923, 0779008431 (42023)

### THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் வாசிக்க, கதைக்க, இலக்கணம் பயில By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (42057)(21.11.18)

### தேவை

டார்லி பட்லர் அன் கொம்பனி யாழ். முகவர்களுக்கு பின்வரும் வேலை ஆள்கள் தேவை.
1.கணக்காளர் (Accountant) ஆண்
2.கணக்குப் பதிவாளர் (Book Keeper) பெண்
முன்னனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது.
நேர்முகத் தேர்வு - 30.10.2005 (ஞாயிறு)
இடம் - சன்றைஸ் மெடி கிளினிக் 388, ஆஸ்பத்திரி வீதி.
(42062) (21.18.11)

## துயர்பகிர்கின்றோம்

### இராமலிங்கம் சதீஸ்



பூ உதிர்ந்து சருகானதேனோ - உந்தன்
பொன்மேனி இன்று விண் சென்றதேனோ?
வருடிவிடும் உன்வார்த்தை இன்று
வாயடைத்து போனதுவோ

ஓ காலனே கருணையின் மறுவடிவம்
தர்மத்தின் காவலனைக் கவர்ந்திழுக்க
அவனென்ன லஞ்சம் தந்தான் உனக்கு
ஐயாறு வயதினிலே பெற்றோர் பரிதவிக்க
கூடிப்பிறந்தோர் நிலைதெறிக்க
கட்டிய துணைவியும் சேயும் தவிதவிக்க
நீ கானகம் சென்றதேனோ?

நல்லோர் வாழ்வு குறுகியது என்ற நாட்டுத் தத்துவத்தை உண்மையாக்கிய எமது நண்பனுக்கு இது எமது கண்ணீர்க் காணிக்கை.
நண்பன் சதீஸின் திடீர் பிரிவால் நடுவானில் செய்வதறியாது நிற்கும் அவரது பெற்றோர், சகோதரர், மனைவி, குழந்தை அனைவருக்கும் ஆத்மாந்த ஆறுதல் கூறி நண்பனின் ஆத்மா சாந்தியடைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நண்பர்கள்
(45965)(16-11-15) குகன், தாசன், ரங்கன் (U.K.)

## 7ஆம் ஆண்டு எமது இதய அஞ்சலி



அன்னை
மடியில்
15 - 03 - 1962
இலங்கை

ஆண்டவன்
பாதத்தில்
13 - 11 - 1998
சுவிஸ்

### அமரர் செல்லையா சிவஈஸ்வரன்

திதி: அபரபக்க தசமி (27.10.2005)
கருணை உள்ளம் படைத்தவரே
கடல் கடந்து வந்தோமே
கண்டது என்ன அப்பா நாங்கள்
உள்ளம் நொந்து மனம் தேறி
உமது ஆத்மாசாந்திக்கு
இறைவனை வேண்டுகிறோம்.

(42966)(21.18.15.11)

'செல்வ றங்கம்'
இணுவில் மேற்கு,
சுன்னாகம் .

உமது பிரிவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்,
தாய், உற்றார், உறவினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
**க.ரவீந்திரன்** (காவலாளி) அவர்களின் தந்தை
**மூ.கனகரத்தினம்**
(முருகேசு பண்டிதர் வீதி- சுன்னாகம்)

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.வடக்கு பிரதேச சபை
ஊழியர் நலன் புரிச் சங்கம், மயிலிட்டி.
(42059)(18-11-21)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆசைப்பிள்ளை கந்தையா

தொல்புரம், யமானை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் 180/1, பிறவுண் வீதியில் வசித்து வந்தவருமாகிய திருமதி ஆசைப்பிள்ளை கந்தையா நேற்று (27.10.2005) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் அமரர் வன்னித்தம்பி கந்தையாவின் (Rtd. D.I.T தபால் தந்தித் திணைக்களம், யாழ்.) அன்பு மனைவியும் இரத்தினேஸ்வரி, Dr.இரத்தினகுமார்(U.K), முருகரத்தினம், வன்னியநாதன் (France) ஆகியோரின் அன்புத் தாயாரும் K.குமாரவேல், Dr.சறோஜினிதேவி(U.K), சண்முகதேவி, சூரியகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியும் வசந்தி (France), வசந்தகுமார்(U.K), குகாஜினி, தட்சாஜினி, உஷாஜினி,பத்மநாதன் (France) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டெனி, பொறிஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.முருகரத்தினம்** (அப்பன்-மகன்).
180/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0779591072
(42054)(21.11.18)

### கதிரேசு மகாலிங்கம் (லிங்கம்)

(முன்னாள் உரிமையாளர் காந்தன் அச்சகம், தெல்லிப்பழை)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு மகாலிங்கம் 27.10.2005 அதிகாலை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் முகுந்தன் (நோர்வே), மகிந்தன் (பிரான்ஸ்), மகிலா (நோர்வே), மேகலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மணிவண்ணன் (நோர்வே), கிருஸ்ணகுமார் (நோர்வே), அருட்செல்வி (நோர்வே), பாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும். திறிம் அனோஜன், எமில்வர்மன் பரிஷ்னா, மேனன் மயூரி, அஜேராம் அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முகவரி
சம்பியன் லேன்,
கொக்குவில்.
தொ.பே.இல. 0712244821

தகவல்:
மகேஸ்வரி
(மனைவி).

# நிர்வாக முகாமைத்துவ சேவையை நீக்க அரசுக்கு அமைச்சு பரிந்துரை

கொழும்பு, ஒக்.28

கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் அரச நிர்வாக முகாமைத்துவ சேவையை நீக்குவதற்கு நிர்வாக சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இச்சேவையை முற்றாக நீக்கி அச் சேவையின் கீழ் பணியாற்றும் சகல ஊழியர்களையும் மீண்டும் அவர்கள் மேற்கொண்டிருந்த முன்னைய பணிகளில் அமர்த்தலாம் என்று நிர்வாக சேவைகள் அமைச்சு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

நிர்வாக சேவையின் கீழுள்ள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் , சுருக்கெழுத்தாளர், களஞ்சியப் பொறுப்பாளர், சிறாப்பர் மற்றும் கணக்குப் பதிவாளர் ஆகிய தரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் விதமாக நிர்வாக முகாமைத்துவ சேவை உருவாக்கப்பட்டது.

இது செயற்படுத்தப்பட்டதன் பின்னர் நிர்வாக சேவையில் நூற்றுக்கு 50 சத வீதமான பணிகள் கூட நிறைவேற்றப்படாத நிலை உருவாகியுள்ளது. இதனையடுத்தே அந்தப் புதிய சேவையை முற்றாக நீக்க நிர்வாக சேவைகள் அமைச்சுத் தீர்மானித்துள்ளதாக சுகாதார, பாதுகாப்பு மற்றும் போஷாக்கு, ஊவவெல்லஸ அபிவிருத்தி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தொழில் சங்கங்களின் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்படி யோசனை சில தினங்களில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை , புதிய நடைமுறை கடந்த ஜனவரியில் செயற்படுத்தப்பட்டபோது சம்பள அதிகரிப்பு ஒன்று வழங்கப்பட்டதாகவும்-

பழைய சேவைக்கு ஊழியர்கள் உள்ளீர்க்கப்படும்போது சம்பள மீளாய்வொன்று இடம்பெறும் என்றும் - அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-206)

## தீவக வலய அதிபர்களுக்கு

புங்குடுதீவு ஒக்.28

தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் எதிர்வரும் திங்கடகிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கட்டாயக் கல்விக் குழுக்களை வலுவுடையதாக்கி மாணவர் வரவுகளை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இந்த விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

(ஒ-ரி-202)



நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபையின் பாலர் பாடசாலைச் சிறுவர்கள் தமது தென்னிலங்கைச் சுற்றுப்பயணத்தின்போது நுவரெலிய ஹக்கல பூந்தோட்டத்தில் எடுத்த படம்.

*(படம்: நல்லூர் செய்தியாளர்)*




கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கணித, விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.சிறீகரன் உரையாற்றுகின்றார்.

மன்றத் தலைவர் தெ.சபில்ராஜ்,யாழ். கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரியர் ஆலோசகர் ச.அருந்தவரத்தினம், கல்லூரி பிரதி அதிபர் திருமதி மலைமங்கை கயிலைமகான் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

## கடந்த பொதுத்தேர்தலை விட 4 லட்சம் வாக்காளர் அதிகரிப்பு

கடந்த பொதுத் தேர்தலைவிட எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 4 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர் என்று கணிப்பீட்டுத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான வாக்காளர்கள் உள்ளனர். குறைந்த எண்ணிக்கையான வாக்காளர்கள் திருகோணமலை, வன்னி மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ளனர்.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது வாக்காளர்களின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் 14 லட்சத்து 67 ஆயிரத்து 751 பேர் எனவும், கம்பஹா மாவட்டத்தில் 13 லட்சத்து 27ஆயிரத்து 145 பேர் எனவும் குருநாகல் மாவட்டத்தில் 10லட் சத்து 89 ஆயிரத்து 482 பேர் எனவும் பதிவு செய்யப்பட்டது. குறைந்த வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டமான திருகோணமலையில் வாக்காளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 24 ஆயிரத்து 307 பேர் ஆவர்.

கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான வாக்காளர்களின் எண்ணிக்கை 1கோடியே 28 லட்சத்து 99 ஆயிரத்து 139 பேர் ஆகும். இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 1கோடியே 33 லட்சமாகும்.

(ஒ-206)

## கனடாவில் தமிழர் கொலை; சந்தேகநபர் கைது!

கனடாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் வாகனத்தால் மோதி இரு தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அமெரிக்காவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்

பல்கலைக்கழக மாணவர்களான ந.சோமியன் (வயது 19), ந.சந்திரசேகரன் (வயது 26) ஆகிய சகோதரர்கள் வீதியில் சென்றபோது இனந்தெரியாத நபரொருவர் இவர்களை வாகனத்தால் மோதிக்கொன்றார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான போல் ஜெயராஜ் அலெக் சாண்டர் என்பவரை கைது செய்வதற்கு கனடா காவல்துறை மூன்று குழுக்களை நியமித்திருந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவிற்குத் தப்பிச்சென்ற சந்தேகநபர் அந்நாட்டுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் அமெரிக்க நீதிமன்றினால் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் கனடாவிற்கு நாடு கடத்தப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

(ஒ-ரி)

## 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மேலும் சில பெறுபேறுகளின் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியானமுடிவுகள் உதயனில்தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

மேலும் சில பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு-

**நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க.**

அ.சிந்துஜன்(152), ம.சாம்பவி(148), உ.நிபோசணன்(143), சி.மயூரதன்(137), ந.வீஷ்மணா(132),ச.சௌமியா(130), ஞா. பிரியதீபிகா(127), ஞா.பிரியசோபிகா (127), க.பிரியங்கன்(125), யோ.புவிதன் (125).

**புனித ஜோண் பொஸ்கோ**

பேரானந்தராஜா டினேசன்(175), மரியகுலரத்தினம் பிளேற்றஸ் அனோஜன்(167), கிறிஸ்தோப்பர் விவேக் வினுசாந் (164), விஜயரட்ணம் வர்கீசன் (163), பிரகதீஸ்வரன் குணவாசன்(162), ஜெயராஜா சர்மிஜா (162), சிவானந்தன் மறுஜன்(131), ஜனகன் பிரதாபன்(143), மகேந்திரன் குவீந்திரன் (142), ஜெயக்குமார் புலேந்திரன் தனுசன்(146), அந்தோனிராஜன் றோச் டனிஸ்ரன்(129)

பத்மநாதன் சயந்தன்(128), சிவபாலன் சிவம்சன்(149), சிவபாலசர்மா ஸ்ரீ பாதசர்மா (142), அன்ரன் செல்வதயாளன் உமேஷ் ஜோய் (140), கண்ணதாஸ் அபிநயா(132), கனகராஜா அபிடன்சி(159), விக்னேசியா அனுஷா (150), யோகராசா கோகீசன் (146), அனேதலிங்கம் கிருஷிகன்(143), பரமலிங்கம் மதுஷன் (135), சிவனேஸ்வரன் பிரசோபன் (135), ராஜசேகர் புவிஸ்ரீன் (148).

கலைச்செல்வன் ருசான்(126), விநாயகவசீகரன் சஜீவன்(156), சிவயோகராஜன் சிவனுஜன்(152), றேமன்ட் ஹபிரியன் அகஷ்ரினி பிரியங்கா(132), செல்வரட்ணம் டினுக்ஷி(149), ரவீந்திரநாதன் கம்சாயினி (133), சிவகுமார் காருண்யா(126), பரமேஸ்வரன் கிருத்திகா(134), லோகநாதன் லக்சனா(148), செந்தில்ராஜா மதுஜா(128), முத்துக்குமார் நீரியநிரோங்கா(126), சுதாகரன் நாராயணி(146), உதயரட்ணம் நிஷாங்கா (131), தியாகமூர்த்தி பிரணவி(161), தர்மகுலசிங்கம் பிரவீனா(125), அன்ரன் ராஜகுமார் றொசானி(154), அரசரட்ணம் சலோமி (149), கணேஷ்வரன் அபராஜிதன்(158), துரைசிங்கன் அருணன்(125), அலோசியஸ் அன்றூ(136), சத்தியநாதன் பெஞ்சமின்(149).

அன்ரன் சில்விஸ்ரர் பிராயன் ஜெனற் (158), நிர்மலகுமார் கஜனன்(144), பாலசிங்கம் கஜனன்(132), இளங்கோவன் கௌதமன்(133), நகுலராஜா கார்த்திகன் (129), கனிசியஸ் கெவின் கொஸ்னர்(130), கோகுலபாலன் கோகுலரூபன்(128), விக்னேஸ்வரன் குகணன்(135), கெங்காதரன் நிஷாதரன்(148), பெனடிக்றோயல் ஜீவன் (143), ராஜேஷ்வரன் நித்தியா(138), புவிச்சந்திரன் பிரியங்கா(151), வேல்முருகன் செயால் (138).

குமரேஷ் ஆர்த்திகா(135), நாகேந்திரமூர்த்தி சாம்பவி(138), தர்மரட்ணம் சபிஷ்ட்டா (152), ஜெயராஜா சயீபானி(149), குருபாதம் சரோன் வான்மதி(151), உதயகுமார் சரண்யா(135), சந்திரசேகர் திலக்ஷி(146), சற்குணராஜா வேதிகா(128), ஸ்ரீகாந்தன் விஷ்ணுப்பிரியா(125), ரமேஷ் யதுசங்கரி (144), தேவசகாயம் பெட்டினன் வின்ஸ்போ (132), உதயகுமார் யதுர்ஷன்(133), பரமநாதன் கேசவன்(127), கோபாலசுதரின் விசாகபவன்(155), சுப்பிரமணியம் யாதவன் (140), ஸ்ரீஸ்கந்தராஜா தனுலக்ஷன் (146), செல்வநாயகம் றதுஷா(131) ராஜாராம் தட்ஜினி(139),புவனராஜா கௌசிகா (142), மூர்த்தி கௌசிகா(138),

யோகராஜா கோமரனிற்றா(150), போல்யஸ்ராஸ் சதீஸ்குமார் லிட்ஜா(125), எட்வேட் அன்ரன் மனோ சாமினி(132), ஜெயராஜா மரியனி மினோரியா(134), ஸ்ரீ மோகன் வைஷ்ணவி(143), லவனகுமார் வர்ஜினி (136), சிவகுமாரன் விதுஷா(132).

**வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன்**

கே.சிந்துஜன்(137), ரி.பிரதீப்(135).

**கட்டைவேலி மெதடிஸ்த மிஷன்**

எம்.சஞ்ஜிகா(127).

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்**

வி.பிரஷாந்தன்(124).

**வல்வெட்டி விநாயகர் வித்தி.**

ஆர்.திவாகர்(150),ரி.சித்திராங்கி(140).

**துன்னாலை காசிநாதர் வித்தி.**

கே.கதூர்ஷன்(154), என்.கௌஷிகன் (127), ரி.தக்ஷா(141), கே.கபிலன்(150), ஏ.வைகரன்(143), எஸ்.அபினஜா (129), எம்.சாருஜா(131).

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

கணேசன் சுகிதரன்(131), இரத்தினசிங்கம் நரேஸ் (130).

(ஒ-12-70-203-202)

## காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக...

**ஞானக்கதிர்**

'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவை வாக்கு. ஆன்மாவானது லயப்படும் இடமே ஆலயம் எனப்பட்டது. ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கிச் செயலற்றிருப்பதற்கு ஆலயமே சிறந்த இடமாகும்.

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக' என்பது போல உடம்பை ஆலயமாகக் கொண்டு மனதை வயப்படுத்துவதென்பது மிகவும் கஷ்டமே. எல்லோருக்கும் பக்குவ நிலை வரவேண்டுமேயாயின் முதலில் மனக் கட்டுப்பாடே அவசியம். 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்பது ஆன்றோர் வாக்கு.

'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றபடி எமது உள்ளமாகிய தாமரையிலே உலகைக் காக்கும் பரம்பொருளான இறைவன் அமர்ந்துறைவதற்கு நாம்தான் நம்மைத் தயார்ப்படுத்தவேண்டும்.

திருநாவுக்கரசு நாயனார் ஆலயமொன்றில் உழவாரத்தொண்டு செய்துகொண்டிருந்தபோது புற்களுக்கிடையே நவரத்தினங்களையும் பொன்னையும் வரச்செய்தார் இறைவன். புல்லைச் செருக்கி வந்த நாயனார் கண்களில் அவைபட்டதும் அவர் சற்றும் சஞ்சலமடையாமல் அவற்றை அப்படியே அள்ளிப் புற்களோடும் கற்களோடும் வீசிவிட்டார். இறைவன் அவரது பரிபக்குவ நிலையை மெச்சிக் காட்சி கொடுத்தருளினார்.

எனவே, நாங்களும் எமது உள்ளத்தை முதலிலே தூய்மையாக வைத்திருக்க வேண்டும். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். எல்லாவற்றுக்கும் மனமே காரணம். நாம் எமது மனத்தைத் துப்புரவாக வைத்திருந்தால் இறைவன் அங்கே நிச்சயம் குடிகொள்வான்.

நாங்கள் எமது மனதைத் தூயதாக்கிக் கொள்ள இறை தொண்டும் இறை தியானமும் செய்தல்வேண்டும்.

நாங்கள் இதனை நமது வாழ்க்கையிலே மிக அவதானமாகக் கைக்கொண்டு நடந்தால் எந்தவிதமான இடர்களும் நம்மை வந்து அணுகமாட்டா. உள்ளம் மிகத் தூய்மையாகும். அப்பொழுது ஆண்டவன் தானாகவே வந்து அங்கே அமர்ந்து கொள்வான்.

உள்ளத்தைத் தூய்மையாக்கி உலகில் உத்தமராக வாழ்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்ள அவனருளையே நாடி நிற்போமாக.

**- திருவரங்கன்.**

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையில் - இலங்கை தொழில்நுட்பவியல் சேவை குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ', இலங்கை தொழில்நுட்பவியல் சேவை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2005

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள இலங்கை தொழில் நுட்பவியல் சேவை குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ', இலங்கை தொழில் நுட்பவியல் சேவை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2005.11.14 ஆகும்.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| *01. குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ'* | *31* |
| *02. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ'* | *25* |

குறிப்பு:
சேவையின் தேவையினைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

**02. ஆள்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

I. அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியம் பெற உரிமை உண்டு. ஏற்கனவே ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு தொடர்ந்து பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டும்.
II. இது ஓர் இடமாற்று சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அத்துடன் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

**03. பொதுத் தகைமைகள்**

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல).
ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல்வேண்டும். அதாவது இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.
உ. பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது பொதுத் தகைமைகளையும் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய கல்வித் தகைமைகளையும் நிரூபித்தல் வேண்டும்.
1.வாக்காளர் இடாப்பின் பிரதி
2. வதிவு தொடர்பான கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்
3.நற்குணச் சான்றிதழ்
4.பிறப்புச் சான்றிதழ்
5.கல்விப் பெறுபேற்றுச் சான்றிதழ்
6.அடையாள அட்டை

குறிப்பு:
வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப் படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**04. ஆள்சேர்ப்புமுறை:**

எழுத்துப்பரீட்சையில் திறமை அடிப்படையிலும் ஆள்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றிக்கைகளுக்கும் தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கும் அமையவும் ஆள்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் இந்த அறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் ரத்துச்செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களில் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

குறிப்பு:
இவ்விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன் கல்வித்தகைமைக்குரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் (பெறுபேறுகளை எதிர் பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

**05. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/-ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன், எக்காரணம் கொண்டும்செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/- ஐச் ***செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை*** என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைதல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்கும் முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக A4 அளவிலான (21 செ.மீ. X 29 செ.மீ.) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தான் விரும்பும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். **ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம்** அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 200/-ஐச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை ஒட்டியனுப்புதல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2005.11.14ஆம் திகதிக்கு முன்னர் ***செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை*** என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் உரிய பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.
எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்குத் தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகரிக்கு அறிவித்தல் வேண்டும்.

**07. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-**

| நகரம் | எண் | நகரம் | எண் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | - 1 | 6.திருகோணமலை | - 6 |
| 2. மன்னார் | - 2 | 7. மட்டக்களப்பு | - 7 |
| 3. வவுனியா | - 3 | 8. அம்பாறை | - 8 |
| 4. கிளிநொச்சி | - 4 | 9. கல்முனை | - 9 |
| 5. முல்லைத்தீவு | - 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**I. குடியேற்ற உத்தியோகத்தா : வகுப்பு II'ஆ'**

**சம்பள அளவுத்திட்டம்**
பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004இற்கு அமைய
ரூபா 105,840 -7X1,320 - 10X1,560 - 130,680/- (TB -3-1-1)

**கல்வித் தகைமைகள்:**

விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
I. மொறட்டு பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ்.
II. குண்டசாலை, அங்குண கொல பொலச, பெல்வெகாற, வவுனியா, கரப்பிஞ்ச,லவுதுவ, அநுராதபுர, விபிலெ, வாரிய பொல ஆகிய விவசாயக் கல்லூரிகளில் ஒன்றினால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ்.
III. உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய டிப்ளோமா விவசாயச் சான்றிதழ்.
IV. மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்குச் சமமானது என வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சான்றிதழ்.

**எழுத்துப் பரீட்சை:**

இப்பரீட்சைகள் தமிழ் / சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:

*1. பொதுஉளச்சார்பு ஒரு மணித்தியாலம் 100 புள்ளிகள்*
சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு, அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்பைப் புரிந்துகொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

*2. பொது அறிவு ஒரு மணித்தியாலம் 100 புள்ளிகள்*
இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்
பகுதி I
சூழல், உலக விஞ்ஞான அறிவு சார்ந்த தகல்கள் தொடர்பாக உள்ள பரீட்சார்த்திகளின் அறிவையும் தெளிவையும் அளவிடுதல்.

பகுதி II
இவ்வினாத்தாள் காணியும் விவசாயமும் சம்பந்தமான அறிவைப் பரீட்சிப்பதாக அமையும்.

நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெறப்படுதல் வேண்டும் எனினும், இப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் திறமை அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# திங்கள் வந்து வெள்ளி திரும்பும் அலுவலர்களே நெடுந்தீவு பின்தங்கியிருக்க முக்கிய காரணம்!

## சர்வதேச ஒருங்கிணைப்பு மையம் தெரிவிப்பு

கொக்குவில்,ஒக்.28

வாரத்தில் திங்கட்கிழமை மதியம் வந்து வெள்ளிக்கிழமை மதியம் சென்றுவிடும் அலுவலர்களாலேயே நெடுந்தீவு பின் தங்கியுள்ளது.

சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவின் அடிப்படை மற்றும் உயர் தொழில்நுட்பத் தேவைகளை இனம்கண்டு புலம்பெயர்ந்த மக்கள் உட்படப் பலரினதும் உதவியோடு நிதி, ஆள்பலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து தேவைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையத்தினராகிய நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

நெடுந்தீவின் அடிப்படைத் தேவைகளை நாம் ஆராய்ந்தோம். யாழ்.குடாநாட்டில் நெடுந்தீவுப் பிரதேசமே மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளமை அப்போது தெரியவந்துள்ளது. இதற்கான காரணத்தை நாம் ஆராயந்தபோது நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் குறிப்பாகப் படகுச் சேவையில் நிலவும் குறைபாடே அதற்குக் காரணம் என்று உணரமுடிகிறது.

நெடுந்தீவில் பணிபுரிபவர்களில் பெரும்பாலானவர்கள் பிற இடங்களில் இருந்து காலையில் வந்து பணிமுடித்து மாலையில் செல்பவர்களாகவே உள்ளனர். இவர்களுக்குக் கடற்பயணம் வசதியற்றதாகக் காணப்படுகிறது. அத்துடன், அலுவலர்கள், ஆசிரியர்களில் பலரும் வாரத்தில் திங்கட்கிழமை மதியம் நெடுந்தீவுக்கு வருகின்றனர். அவர்கள் வெள்ளிக்கிழமை மதியம் புறப்பட்டு விடுகின்றனர்.

இதனால், வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் மட்டுமே தமது கடமைகளில் ஓரளவு முழுமையாகக் கவனம் செலுத்த இவர்களால் முடிகிறது. அரச, தனியார் சேவைகள் குறிப்பாக அபிவிருத்திப் பணிகள் ஆக்கபூர்வமான அர்ப்பணிப்புடன் நெடுந்தீவில் இடம்பெறாமைக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

ஆகவே, குமுதினிப் படகுச் சேவையைக் குறிகாட்டுவானிலிருந்து காலை 8 மணி, முற்பகல் 11 மணி, பிற்பகல் 2 மணி, மாலை 5 மணி ஆகிய நேரங்களிலும்-

நெடுந்தீவிலிருந்து காலை 9 மணி, முற்பகல்10 மணி, பிற்பகல் 3 மணி, பிற்பகல் 4 மணி ஆகிய நேரங்களிலும் -

நடத்தும்படிக் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை- கூட்டுறவுச் சங்கப் படகுச் சேவையைக் குறிகாட்டுவானிலிருந்து காலை 8 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் நெடுந்தீவிலிருந்து காலை 7 மணிக்கும் மாலை 6 மணிக்கும் நடத்தும்படியும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கூட்டுறவுச் சங்கப் படகுச் சேவையை நாள்தோறும் நடத்துவதால் ஏற்படும் மேலதிகச் செலவைத் தருவதற்கு எமது மையம் தயாராகவுள்ளது - இவ்வாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-76)



*ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியின் கீழ் சர்வதேச இடப்பெயர்வுக்கான நிறுவனம் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்திற்குப் போட்டோப் பிரதி இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.*

*இதற்கான கையளிப்பு நிகழ்வின்போது சர்வதேச இடப்பெயர்வுக்கான நிறுவனத்தின் பிரதிநிதி உதயகுமார் போட்டோப் பிரதி இயந்திரத்தைக் குருநகர் கடற்தொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் யூ.சகாயராசாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.*

*குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார், நெய்தலம் இயக்குநர் வண. பிதா ஆர்.ஜெயசேகரம் அடிகளார் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*

*(படம்: குருநகர் செய்தியாளர்)*

# தூர்வாரி குவிக்கப்பட்ட மண்மீண்டும் புல்லுக்குளத்துக்குள் செல்லும் நிலை

கொழும்புத்துறை,ஒக்.28

யாழ்.புல்லுக்குளத்தை ஆழமாக்கியபோது அகழ்ந்து எடுக்கப்பட்ட மண் மீண்டும் குளத்திற்குள் கரைந்து செல்லும் நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இக்குளம் தூர்வாரப்பட்டபோது இயந்திரங்களால் அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் குளக்கரையிலேயே குவிக்கப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் பலத்த மழையால் இந்த மண் குவியல் கரைந்து மீண்டும் குளத்தினுள் செல்கிறது.

இதேவேளை- குவியலின் மறுபுறத்திலிருந்து வண்டல்மண் மழை வெள்ளத்தில் கரைந்து வீதியில் சேறாகச் சேர்வதால் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இவற்றை அவ்விடத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோருகின்றனர்.(ஒ-30)

# சுனாமி அழிவுகளை நினைவு கூரும் நிகழ்வுகள் நடத்த ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஒக்.28

ஆழிப்பேரலை அழிவின் ஒரு வருடப் பூர்த்தியை நினைவு கூரும்முகமாகப் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவது குறித்து யாழ்.செயலக சுனாமி அனர்த்த புனர்வாழ்வு நிலையம் ஆலோசித்து வருகின்றது.

கடந்த வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி ஆழிப்பேரலை பல்வேறு இடங்களிலும் தாக்கியது. இதில் யாழ்.மாவட்டத்தில் மருதங்கேணி மற்றும் பருத்தித்துறைக் கடலோரப் பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின.

இந்த அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

சமயவழிபாடு, முன்பள்ளித் திறப்பு விழா, மணற்காடு, திக்கம் ஆகிய பிரதேசங்களில் நிரந்தர வீடுகள் கையளித்தல், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், நினைவு மலர் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கான திட்டங்களே ஆலோசிக்கப்படுகின்றன.

ஆனாலும் இவற்றுக்கான நிதி ஆதாரம் கிடைத்தால் மட்டுமே இவற்றைச் செயற்படுத்த முடியும் என்றும் கூறப்பட்டது.(ஒ-202-204)

# கழிவகற்றல் வசதி இல்லாத பண்ணைகளை மூட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.28

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் தகுந்த முறையில் கழிவகற்றல் வசதி செய்யப்படாத கோழி மற்றும் கால்நடை வளர்ப்புப் பண்ணைகளை மூடிவிடுமாறு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பண்ணை உரிமையாளர்களுக்கு நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் பல தடவைகள் கழிவகற்றல் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும்-

இதனைத் தொடர்ந்து, தகுந்த முறையில் கழிவகற்றல் செய்யாத பண்ணைகளை மூடிவிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது. தகுந்த முறையில் கழிவகற்றலை மேற்கொள்ளாத பண்ணைகள் மீது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிவித்தலின் பிரகாரம் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-202)

# நெடுந்தீவில் பயன்படாத மின்பிறப்பாக்கி

நல்லூர்,ஒக்.28

நெடுந்தீவு வைத்தியசாலையில் சுகாதாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்துமாறு பொது மக்கள் கோரிவருகின்றனர்.

தற்சமயம் மின்சார சபையின் ஊடாகவே ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. மின்சார சபை இரவு 11 மணி வரையே மின் விநியோகம் செய்வதால் அதன் பின்னர் வைத்தியசாலை மண்ணெண்ணை விளக்குகளின் உதவியுடனேயே செயற்படவேண்டியுள்ளது.

வைத்தியசாலையில் உள்ள மின் பிறப்பாக்கியை மீண்டும் இயக்குவதனால் வைத்தியசாலைக்குப் போதுமான அளவு வெளிச்சத்தைப் பெற முடியும் எனப் பொது மக்கள் கூறுகின்றனர். (ஒ-111)

# கசிப்பு விற்றவரின் வாழைத்தோட்டம் இனம் தெரியாதவர்களால் அழிப்பு !

வலி.வடக்கு,ஒக்.28

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டவர் என்று நம்பப்படும் நபர் ஒருவரின் வாழைத்தோட்டம் இனம் தெரியாதவர்களால் வெட்டி அழிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்குப் பகுதியில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த வாழைத்தோட்ட உரிமையாளர் கசிப்பு உற்பத்தி செய்து விற்றுவந்தார் என்றும் -

அவரது வீட்டிற்குச் சென்ற இளைஞர்கள் சிலர் அங்கிருந்து கசிப்பை நிலத்தில் ஊற்றி கசிப்பு உற்பத்தி உபகரணங்களை நாசம் செய்தனர் என்றும் -

பின்னர்அந்த இளைஞர்கள் சீருடையினரால் எச்சரிக்கப்பட்டனர் என்றும் -அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையிலேயே சம்பந்தப்பட்ட நபரின் வாழைத்தோட்டம் இனம்தெரியாவர்களால் வெட்டி அழிக்கப்பட்டது.(ஒ-86)




# சுன்னாகத்தில் சிறுவர் தின விழா

வலி.தெற்கு,ஒக்.28

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை முன்பள்ளியினருடன் இணைந்து சர்வதேச சிறுவர்தினத்தைக் கொண்டாடினர்.

சுன்னாகம் லயனஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.பேரின்பநாயகம் தலைமையில் விழா நடைபெற்றது.

லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் அரியரத்தினம் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

முன்பள்ளி மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள், போஷாக்குணவுகள், பால்மா வகைகள், விளையாட்டு உபகரணங்கள், பொழுதுபோக்குச் சாதனங்கள் போன்ற பல பொருள்கள் விழாவில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்பட்டன. (ஒ-152)

# பருத்தித்துறை மற்றும் தம்பசிட்டியில் சித்த மருந்தகம் தலா 3 நாள்கள்

வடமராட்சி,ஒக்.28

பருத்தித்துறை அரசினர் மத்திய சித்த ஆயுள்வேத மத்திய மருந்தகம் பருத்தித்துறை நகரில் வாரத்தில் மூன்றுதினங்களும், தம்பசிட்டியில் மூன்று தினங்களும் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஆரம்பத்தில் பருத்தித்துறை நகரத்தில் திறந்துவைக்கப்பட்ட இம் மருந்தகம் சில தினங்களின் பின்னர் திடீரெனத் தம்பசிட்டிக்கு மாற்றப்பட்டது. இதனைப் பருத்தித்துறை நகர மக்கள் ஆட்சேபித்தனர். இதனைத் தொடர்ந்து பருத்தித்துறையிலும், தம்பசிட்டியிலும் மருந்தகத்தை மாற்றி இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வடக்கு-கிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வடகிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் திருமதி இ.தர்மராசா இம் மருந்தகத்தைப் பருத்தித்துறை நகரில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலும் தம்பசிட்டியில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களிலும் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் பிரகாரம் இரு இடங்களிலும் வாரத்தில் தலா மூன்று தினங்கள் இம் மருந்தகம் இயங்கி வருகிறது. (ஒ-173)

# ஜனாதிபதித் தேர்தல் பணிகளை இங்குள்ள அதிகாரிகளே மேற்கொள்வர்

## யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28

ஜனாதிபதித் தேர்தல் பணிகளை யாழ். மாவட்டத்தில் இங்குள்ள அதிகாரிகளே மேற்கொள்வர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஞா.குகநாதன். ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்ற தெற்கில் இருந்து அதிகாரிகள யாழ்.மாவட்டத்துக்கு வருகைதரவுள்ளனர் என்று கூறப்படுவது தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் காலங்களில் கடமைபுரிவதற்குப் போதுமான அதிகாரிகள் உள்ளனர் என்றும்-

ஆகையால் மேலதிகமாக அதிகாரிகள் இங்கு வரவேண்டிய அவசியமில்லை. இங்குள்ள உத்தியோகத்தர்களே இங்கு கடமைபுரிவார்கள் என்றும்- அவர் கூறினார்.(ஒ-203)



*வலிகாமம் மேற்குப் பிரதேசசபை ஊழியர்கள் உள்ளூராட்சி வாரத்தையொட்டி வட்டுக்கோட்டை முதலிகோவிலடி முதலியார் குளத்தை ஆழமாக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.*

*(படம்:-வலிமேற்குச் செய்தியாளர்)*

கொழும்பு மொத்த விலையில்!
அனைத்து ரகப் புடைவகைளையும்
பெற்றுக்கொள்ள!!
(சி/45930)
சீமாட்டி புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(21.32.17-15)


தீபாவளி மலிவு விற்பனை!
சுபமுகூர்த்தப் பட்டு சாறிகள்,
பட்டுவேட்டி சால்வைகல்
சிறுவர்களுக்கான சூட். சேட் வகைகள்
அனைத்திற்கும் தரச்சிறப்பில்
முன்னணி பெற்ற ஒரே ஸ்தாபனம்.
வளர்மதி புடைவை அகம்
(176) 258, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


யாழ்.நகரில்
தீபாவளியை முன்னிட்டு
என்றும் இல்லாத!
எங்கும் இல்லாத!
விலைக்கழிவில் !!!
* திருமணப் பட்டுப் புடைவைகள்
* சல்வார் கமிஸ் வகைகள் மற்றும்
* ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைஅணிகள் இத்தனைக்கும்
கல்யாணப் பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனங்கள்

நல்லி சில்க்ஸ்
121/1,மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 5573.
(c/45937)
(21.15.17)

ராசி சில்க்ஸ்
70,71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P.: 5571.

# அரச ஊடகங்களில் வேட்பாளர்களுக்கு சம சந்தர்ப்பம்

கொழும்பு,ஒக்.28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் அரச ஊடகங்களில் சமசந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச ஊடகங்களின் தலைவர்களை அழைத்துப் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அரச ஊடகங்களின் தலைவர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி குமாரதுங்க, அவர்களுடன் முக்கிய பேச்சுகளை நடத்தினார்.

அரசாங்க ஊடகங்கள் பக்கச் சார்பாக செயற்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை அவர்களிடம் முன்வைத்த ஜனாதிபதி, இது தொடர்பில் அரச ஊடகங்களின் தலைவர்கள் முழுமையான கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக அவர்கள் மீது சேறு பூசும் வகையிலான பிரசாரங்களில் அரச ஊடகங்கள் ஈடுபடக் கூடாதென்றும், அனைத்து வேட்பாளர்களுக்கும் சம சந்தர்ப்பத்தை அரச ஊடகங்கள் வழங்க வேண்டுமென்றும் ஜனாதிபதி மேலும் உத்தரவிட் டார் என அறியவந்தது.

(க)

நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்
கேள்வி அறிவித்தல்

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத மோட்டார் வாகனங்களை கேள்விகள் மூலம் விற்பனை செய்தல் (நீதியமைச்சு சுற்றறிக்கை இல: 08/2003 10.12.2003 பிரகாரம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் 26.11.2005 முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ள ஏலவிற்பனையில் கீழ் வரும் மோட்டார் சைக்கிள்க்ளும் விற்பனை செய்யப் படவுள்ளன.

01. எம்.டி.90 கொண்டா நிறம் சிவப்பு
02) பஜாஜ் பொக்சர் நிறம் நீலம்

02. இவற்றை ஏல விற்பனையின்போது கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நீதிமன்ற அலுவலகத்தில் மோட்டார் சைக்கிள்களைப் பார்வையிட்டு மீளச் செலுத்தப்படாத ரூபா 100/-ஐயும் மீளச் செலுத்தப்படற்பாலதான ரூபா 1,000/- பிணை வைப்புத் தொகையையும் செலுத்தி உரிய படிவத்தை இன்று தொடக்கம் 11.11.2005ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
03. பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் பதிவுத் தபாலில் பதிவாளர், நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் ''மோட்டார் சைக்கிள் கொள்வனவிற்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு 22.11.2005 ஆம்திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் 23.11.2005 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்குத் திறக்கப்படும்.

க.மீரா
பதிவாளர்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(42011) (24)

இ.த.விக்னராசா,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

18 +plus
Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

18 Plus இன் இரட்டிப்பு போனஸ்



மிகவும் வசீகரமான, இளம் பருவத்தினரின் சேமிப்பு திட்டத்தில் இன்றே சேமியுங்கள்.
நவ நாகரிகமான Document Holder ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய இளைஞர்களுக்கான வசீகரமான சேமிப்பு திட்டம் 18 Plus கணக்கு ஆகும்.

இச்சேமிப்பு திட்டமானது ஏனைய சேமிப்பு கணக்குகளை விட உயர்ந்த வட்டி வீதமும் பல வகையான அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

கல்லூரி, பல்கலைகழகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கான Document Holder ஒன்று மேலதிக இலவசமாக வழங்கப்படும்.

இந்த நாகரிகமான Document Holder ஐ பெறுவதற்கு இன்றே நீங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கியில் ஆகக் குறைந்த தொகையான ரூபா. 5000/-* வைப்பிலிட்டு புதிய 18 Plus கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

விரையுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

*விதிமுறைக்களுக்கமைய

BOC
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

Twin Advertising

# விடுதலைப் போராட்ட நகர்வில் இசைக்கு முக்கிய பங்குண்டு!

## இறுவட்டு வெளியீட்டு விழாவில் பாலகுமாரன்

எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் செல்வதற்கு நாம் இசையைப் பயன்படுத்தி வருகிறோம். தேசியம் இணைந்த எமது போராட்டத்தில் இசை முக்கியமான பணியை வகிக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போராளி இரா.செங்கதிரின் இசை நெறியாள்கையில் உருவான 'வேரில் விழுந்த மழை' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் மதிப்பீட்டுரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு தனி மனிதனுடைய தலைமையில் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்துழைத்த உழைப்பினுடைய அறுவடையாக இந்த இறுவட்டு வெளிவந்துள்ளது.

காற்றற்ற உலகத்தில் வாழமுடியாதது போல இசையில்லாத உலகத்திலும் வாழ முடியாது. இசையைத் தேடி நாம் அலைந்து கொண்டிருக்கின்றோம். ஏனென்றால் இந்த உலகம் இசைவற்றும் இணக்கமற்றும் சென்று கொண்டிருப்பதால் இசையினுடைய வலுவும் பெறுமதியும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

மேலைத்தேய நாடுகளிலே இசையினுடைய வலுவென்பது அளவிடமுடியாத ஒரு வலுவாக மாறிவருகிறது. அந்தவகையில் இந்த இறுவட்டு ஒரு காலத்தின் தேவையாக வெளிவந்துள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் இசை தொடர்பாகக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இருந்தபோதிலும் தற்போதுள்ள சூழலைக் கருத்திற்கொண்டு அடக்கி வாசிக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.



இசை தொடர்பான பரிசோதனைகளில் அதிகம் ஈடுபடாமல் முக்கிய பணியில் ஈடுபட்டு வருகிறோம். அண்மையில் வைரமுத்துவின் கவிதையொன்றினைப் பார்க்க முடிந்தது. அக்கவிதையில் இசை வெறுமையை நிரப்புவதாகக் கூறுகிறார்.

எங்களுடைய வாழ்க்கையின் இடைவெளி, வெறுமை என்பவற்றை இசைதான் நிரப்புகிறது. இறுகிய எம்மை செங்கதிரின் இறுவட்டு குழையவைக்கிறது.

இசையைத் தேசியம் இணைந்த எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் செல்வதற்குப் பயன்படுத்துகிறோம். இந்த இறுவட்டு நினைவுத் துயரை மீட்பதாக உள் ளது.

இலக்கிய இசைசார்ந்த பாங்காக இந்த இறுவட்டு உள்ளது. இறுவட்டின் தலைப்புக்கூட 'வேரில் விழுந்த மழை'யென அமைந்துள்ளது. அது வேரில் வீழ்மழையென அமைந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறேன்.

தியாகி திலீபன் அவர்களின் அதி உயுச்ச தியாகத்தை, ஈகத்தை வெளிப்படுத்துவதாக இந்த இறுவட்டு அற்புதமான பாடல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது - என்று தெரிவித்தார். (த)




## புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் ஆஸி. டாக்டர்கள் விசேட சிகிச்சை

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் ஆஸ்திரேலிய மருத்துவ நிபுணர்களால் விசேட சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதி முதல்அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை இச்சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

இதில் பொதுமருத்துவம், என்புமூட்டு, பெண் நோயியல் ஆகிய பிரிவுகளில் சத்திர சிகிச்சை நிபுணர்களால் சிகிச்சைகள் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக கட்டிகள், குடலிறக்கம் (கேணியா), மூலவருத்தம், நாசடைப்பு, நீண்டநாள்களாக மாறாத புண்கள், என்பு முறிவு, கர்ப்பப்பை இறக்கம், அதிக இரத்தப்போக்கு ஆகியவற்றுக்கான சத்திர சிகிச்சைகள் இதன்போது வழங்கப்படும்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு இச்சிகிச்சை இலவசமாக வழங்கப்படும் என்றும் -

பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும்படியும் - மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இசையரங்கேற்றம்

தமிழீழ நுண்கலைப் பிரிவு நடத்தும் சிவநாதன் சிவசத்தியமோகனின் இசை அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் சி.சிவசத்தியமோகனின் வாய்ப்பாட்டுக்கு சு.கோபிதாஸ் (வயலின்), க.கண்ணதாஸ் (மிருதங்கம்), இரா.சிவராமன் (கெஞ்சிரா), என்.மாதவன் (கடம்), எஸ். செந்தூரன் (முகர்சிங்), திருமதி மணிமொழி கிருபாகரன் (தம்புரா) ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர். (ஓ)

## மக்கள் வங்கிக் கிளை கணனி மயம்

மக்கள் வங்கியின் கிளிநொச்சிக் கிளைச் செயற்பாடுகள் யாவும் அடுத்த மாதம் முதல் கணனி மயப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக மக்கள் வங்கியின் திறைசேரிப் பொறுப்பாளர் என்.வசந்தகுமார், வடக்கு வலயப் உதவிப் பொதுமுகாமையாளர் என்.தயானந்தன், வன்னிப்பிரதேச முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா ஆகியோர் கடந்த 25ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

## 'வேரில் விழுந்த மழை' பாடல் இறுவட்டு வெளியீடு

கிளிநொச்சி, ஒக்.28

தியாக தீபம் லெப். கேணல் திலீபன் நினைவாக இரா.செங்கதிரின் இசையில் உருவான 'வேரில் விழுந்த மழை' பாடல் இறுவட்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான வெளியீட்டு விழாவில் பொதுச்சுடரைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழத்தேசியக் கொடியைக் கிளிநெச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரைப் புகைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் செஞ்சோழன் ஏற்றினார். தொடர்ந்து புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ந.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையைத் தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன் நிகழ்த்தினார்.

பாடல் இறுவட்டை இரா.செங்கதிர் வெளியிட்டுவைக்க கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகள் கலைவாணனால் வழங்கப்பட்டன.

இறுவட்டு ஆக்கத்தில் பங்காற்றிய கலைஞர்களுக்கு ந.தமிழன்பன் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

மதிப்பீட்டுரைகளை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், புலிகளின் குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையையும் நன்றியுரையையும் இரா.செங்கதிர் நிகழ்த்தினார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. (த-12)

## பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

புளியங்குளம்,ஒக்.28

தமிழீழ சுகாதார சேவைகளின் வவுனியா மாவட்டப் பிரிவினரது அனுசரணையுடன் பாலமோட்டை, கோயில்குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாலமோட்டைப் பனிக்கங்குளம் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் முதலுதவிப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

மிகவும் போக்குவரத்து வசதி குன்றிய அக்கிராமங்களில் இச்சேவை பயனுள்ளதாக அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (த-355)

## இராமநாதபுரம் ம.வியில் 10 மாணவர்கள் சித்தி

வட்டக்கச்சி,ஒக்.28

இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-


நடராசா கதீசன் (159), மித்திரன் யதுர்சா (143), அன்ரனிதாஸ் எழில்மதி (140), கோபாலராசா விதுர்சன் (138), கிருஷ்ண பவான் லக்சனா (136), சின்னராசா ஜனார்த்தி (134), கிருபாகரன் ஜனார்த்தன் (133), இராஜேஸ்வரன் பிரசாத் (132), சதீஸ்வரன் ஐங்கரன் (130), லோறன்ஸ் நிசாந்தன் (130) (த-405)

## பால்மா விலை உயர்வு


புளியங்குளம்,ஒக்.28

புளியங்குளம் பகுதியில் 'லக்ஸ்பிறே' பால்மாவின் விலை அதிகரித்துள்ளது. தனியார் கடைகளில் 165 ரூபாவாகவும் பல நோ.கூ. சங்கக் கிளைகளில் 155 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (த-355)

## 'வேப்பங்கள்' வடியும் அபூர்வ நிகழ்வு!




பூநகரிப் பிரதேசத்தில் சோலை பல்லவராயன்கட்டுப் பகுதியில் வசிக்கும் முத்துக்குமார் விக்னேஸ்வரன் என்பவரது காணியில் உள்ள வேப்பமரத்திலிருந்து 'வேப்பங்கள்' என்று குறிப்பிடப்படும் வெள்ளை நிறத் திரவம் வெளியேறிவருகிறது. பல வருடங்கள் முற்றிய வேப்பமரத்திலிருந்தே 'வேப்பங்கள்' வெளியேறும் அபூர்வ நிகழ்வு நடைபெறும். இந்த 'வேப்பங்கள்' நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் என்று நம்பப்படுவதால் இதனைப் பலரும் வாங்கி அருந்தி வருகின்றனர்.




## துணுக்காய் வலயப் பாடசாலைகளில் சூழல் நல்லாட்சி தினம் அனுஷ்டிப்பு

மல்லாவி, ஒக்.28

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த 18ஆம் திகதி சூழல் நல்லாட்சி தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றையதினம் பாடசாலைகளில் சூழலைத் தூய்மையாக்கும் பணிகள் நடைபெற்றன. சூழலை அழகுபடுத்தும் வகையில் பூஞ்செடிகள் நடப்பட்டன. பயன்தரு மரங்களும் நடப்பட்டன. ஆசிரியர்களும் மாணவர்களும் மேற்படி செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

சூழல் நல்லாட்சித் தினச் செயற்பாடுகளை நோக்கும் பொருட்டு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பாடசாலைகள்தோறும் சென்று அதிபர், ஆசிரியர், மாணவர்களை உற்சாகமூட்டி பாராட்டுத் தெரிவித்தனர். சூழல் பாதுகாப்புத் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளையும் வழங்கினர். (த-322)

ஒக்டோபர் – வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
நற்குடி மக்களாக நற்பிரஜைகளாக வாழ்வதற்கான கல்வி
வாசியுங்கள்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 03 - 1941



உதிர்வு 01 - 11 - 2002

# சு.பொ.விவேகானந்தன்

(துர்கா என்டபிறைஸ் லிமிரெட்)

திதி: ஏகாதசி பூர்வபக்க்ஷ (28.10.2005)

*மனிதப் பிறப்பு எடுத்து மாணிக்கமாய் திகழ்ந்தீர்*
*புனிதப் பணி செய்து புகழுடன் திகழ்ந்தீர்*
*ஆண்டு மூன்று ஆனாலும் ஆறாது எம் துயர்*
*தேடுகிறோம் உம் பாசத்தை.*

'கஜானாஸ்'
தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(சி-45954)(21.18.17.11)

---

வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத் அபிவிருத்தி அமைச்சு

## கட்டடத் திணைக்களம்

# கேள்வி கோரல்

**உயர் கட்டமைப்பு R.C.C வேலைகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (கட்டம் II பகுதி II) இயற்கை விஞ்ஞானத் தொகுதியை நிர்மாணித்தல்**

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (கட்டம் II பகுதி II/ உயர் கட்டமைப்பு R.C.C வேலைகள்) இயற்கை விஞ்ஞான தொகுதியினை நிர்மாணிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் வீடமைப்பு மற்றும் கைத்தொழில் நிர்மாண கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு கேள்விச் சபைத் தலைவரால் பெற்றுக் கொள்வார். மேலும் பெறுவதானது 2005 நவம்பர் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மூடப்படும்.
2. கேள்வி ஆவணங்களை *யாழ்ப்பாணம் பீச் வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடமிருந்து 2005 நவம்பர் 27ஆம் திகதி முதல் வேலை நாள்களில் முற்பகல் 9 முதல் பிற்பகல் 3.30 வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா ஆயிரம் (Rs. 1000/-) செலுத்தி, ICTAD இனால் வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் பதிவுப் புத்தகம் மற்றும் NCASL அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்களுக்கே கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.
3. கேள்விதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (i) நிர்மாணப் பயிற்றுவிக்கும் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு ICTAD மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் M4 மற்றும் அதற்கு மேல் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்து இருப்பதோடு,
   (ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்க அங்கத்தவராயுமிருத்தல் (NCASL) வேண்டும்.
4. கேள்வி ஆவணங்களை யாழ்ப்பாணம் பீச் வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) இலவசமாகப் பார்வையிடலாம்.
5. கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 90 நாள்களுக்கே கேள்விகள் செல்லுபடியாகும். மேலும் ரூபா எழுநூறு ஆயிரம் (Rs. 700,000/-) கேள்விப் பிணையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் *பத்தரமுல்ல, 'செத்சிறிபாய' 2ஆம் மாடி, வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அமைச்சு, பணிப்பாளர் சேவைகள் மே/பா அமைச்சு, கேள்விச் சபை, தலைவர்* அவர்களுக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
7. கேள்விகள் மூடப்பட்டவுடன் பத்தரமுல்ல 'செத்சிறிபாய' 2ஆம் மாடி, வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அமைச்சின் மாநாட்டு அறை B யில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
8. கேள்விதாரர்கள் 'செத்சிறிபாய' வளவுக்குள் உட்பிரவேசிக்கும் போது பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அறியத்தருகிறோம்.
9. விருப்பமுள்ளவர்கள் *யாழ்ப்பாணம், பீச் வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களை மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி 021-2222781)

**W.S. மொல்லிகொட**
**கட்டடங்கள் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**'செத்சிறிபாய' பத்தரமுல்ல.**

(சி-45950)
(21-11-17)

**www.buildings.gov.lk**

---

# எழுச்சி நிகழ்வில் 'வீடியோ' படம் பிடித்த படையினர்

திருகோணமலை,ஒக்.28

திருகோணமலை உட்துறைமுக வீதியில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்றவர்களை அரச படைகளின் புலனாய்வுப் பிரிவினர் வீடியோப்படம் பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மகாவித்தியாலய மூலையிலும் உவர்மலைச் சந்தியிலும் சிவில் உடையில் நின்ற புலனாய்வுப் பிரிவினர் நவீனரக வீடியோ கமரா மூலம் நிகழ்வுக்குச் சென்றவர்களைப் படம் பிடித்துள்ளனர்.

இதுகுறித்த செய்தி தமக்கு இப்போதுதான் தெரியும் என்றும் இந்த விடயம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் எழுத்துமூலம் முறையிடவிருக்கின்றனர் எனவும் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள்பேரவையின் தலைவர் வ. விக்னேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

# இரத்ததானம்

உரும்பிராய்,ஒக்.28

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களின் உதவியுடன் இரத்ததானம் நடைபெறவுள்ளது என கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதுதொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கி நடமாடும் குழுவினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக ஊழியர்களும் இரத்ததானம் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி-202)

# மாணவருக்கு நிதி உதவி

வலி.தெற்கு, ஒக்.28

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு சமுர்த்தி வங்கிகளூடாக ஆயிரம் ரூபா வங்கி சேமிப்புக் கணக்கில் வைப்பில் இடப்பட்டு வங்கிக் கணக்குப் புத்தகங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி வலயம் ஒன்று, சமுர்த்தி வலயம் இரண்டு என்பவற்றினூடாக இப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம சேவையாளர்கள் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 28 மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் இந்த 28 பயனாளிகளையும் தெரிவு செய்திருந்தனர். (ஒ-152)

# தளபாடங்கள் கையளிப்பு

புங்குடுதீவு,ஒக்.28

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் புங்குடுதீவு நசரேத் முன்பள்ளி, பாரதி, காந்தி சனசமூக நிலையங்களுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்ட இத்தளபாடங்கள் அண்மையில் வேலணை பிரதேசசபைச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

(ஒ-ரி-202)

---

## 18 ஆம் ஆண்டு நினைவு கூரல்

மலர்வு 30 - 12 - 1930

உதிர்வு 28 - 10 - 1987

# அமரர் அ.செ.அந்தோனிப்பிள்ளை


(இளைப்பாறிய அரசாங்க எழுதுநர்,வனத்திணைக்களம்)

இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.
(2 கொரிந்தயர் 1: 3)

5ஆம் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

(41361)
(21.11.17)

*அன்பு மனைவி,*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

ஏக முகவர்கள்.
செனற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி). 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# MBBS / MD

# BECOME A DOCTOR

**Medical Degree (Doctor of Medicine MD) offered by**



**CRIMEA MEDICAL INSTITUTE**
**(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)**

**East EUROPE (Ukraine)**

**Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL**

**M.B.B.S Degree Program (6 years)**
**Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry**

**Premedical Program + MBBS (7 years)**
**Eligibility : G.C.E O/L passes in All subjects including English, Maths and Science**

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அன்டைநாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

# யாழ்ப்பாணத்தில்.......

30ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : **COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.**
நேரம் : 30ம் திகதி ஞாயிற்றுகிழமை-மாலை 3.30 pm - 6.30 pm

**Authorized Agents for Asian Region:**
**M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.**

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com **Tel: 0777-767818**

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். கோப் பாய் உதவி அரச அதி பர் பிரிவில் தெரிவானோரில் ஒரு தொகுதியினரின் பெயர்கள வருமாறு:-

| | |
|---|---|
| 192யா/கோ/3785 | திரு. மனுவேல்பிள்ளை ஜேசுதாசன் |
| 193யா/கோ/3788 | திருமதி. யூலியற்பற்றிசியா ஜெயராஜா |
| 194யா/கோ/3789 | திருமதி. கௌசலாதேவி குணரத்தினம் |
| 195யா/கோ/3801 | திரு. குழந்தைவேலு கணேசபிள்ளை |
| 196யா/கோ/3802 | திருமதி. கமலாதேவி தனிகாசலம் |
| 197யா/கோ/3812 | திருமதி. குணவதி கிருஷ்ணபிள்ளை |
| 198யா/கோ/3827 | திருமதி. லீலாவதி சின்னத்துரை |
| 199யா/கோ/3870 | திருமதி. பராசக்தி சோதிராசா |
| 200யா/கோ/3884 | திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம் |
| 201யா/கோ/3890 | திருமதி. பிலோமினா திருச்செல்வம் |
| 202யா/கோ/3895 | திருமதி. ரோகினியம்மா சபாரத்தினம் |
| 203யா/கோ/3899 | திரு. ஆசைப்பிள்ளை இரத்தினம் |
| 204யா/கோ/3903 | திரு. சூரன் இராசு |
| 205யா/கோ/3910 | திரு. கனகபூஷணம் சண்முகநாதன் |
| 206யா/கோ/3931 | திரு. குமாரசாமி சிவகுருநாதன் |
| 207யா/கோ/3969 | திரு. நாகமுத்து சுப்பிரமணியம் |
| 208யா/கோ/3975 | திரு. சிங்கராசா துரையப்பா |
| 209யா/கோ/3988 | திரு. பெரியதம்பி தம்பிராசா |
| 210யா/கோ/4002 | திரு. வேலுப்பிள்ளை வீரவாகு |
| 211யா/கோ/4052 | திரு. சண்முகநாதன் நடேசபிள்ளை |
| 212யா/கோ/4078 | திரு. நல்லதம்பி சற்குணநாதன் |
| 213யா/கோ/4081 | திரு. பொன்னர் செல்லத்துரை |
| 214யா/கோ/4089 | திரு. செல்லத்துரை சுந்தரலிங்கம் |
| 215யா/கோ/4093 | திரு. இராமலிங்கம் செகசோதி |
| 216யா/கோ/4167 | திருமதி. கண்ணகை கந்தையா |
| 217யா/கோ/4198 | திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரம் |
| 218யா/கோ/4204 | திரு. கணபதிப்பிள்ளை முருகேசு |
| 219யா/கோ/4226 | திரு. கந்தையா நடராசா |
| 220யா/கோ/4258 | திரு. முருகுப்பிள்ளை இரத்தினம் |
| 221யா/கோ/4264 | திரு. கந்தையா இராசகுலசிங்கம் |
| 222யா/கோ/4318 | திரு. பெரியதம்பி சின்னத்துரை |
| 223யா/கோ/4346 | திரு. கந்தையா நடராசா |
| 224யா/கோ/4388 | திரு. கதிரேசு முருகேசு |
| 225யா/கோ/4400 | திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம் |
| 226யா/கோ/4424 | திரு. தென்னர் சின்னத்தம்பி |
| 227யா/கோ/4441 | திரு. பெரியதம்பி செல்லத்துரை |
| 228யா/கோ/4516 | திருமதி. சரஸ்வதி ஆறுமுகம் |
| 229யா/கோ/4606 | திரு. ஐயம்பிள்ளை தர்மலிங்கம் |
| 230யா/கோ/4683 | திருமதி. மனோன்மணி பொன்னுத்துரை |
| 231யா/கோ/4714 | திரு. தம்பு நடேசு |
| 232யா/கோ/4715 | திருமதி. நவமணி கதிரவேலு |
| 233யா/கோ/4717 | திரு. தம்பிப்பிள்ளை நாகலிங்கம் |
| 234யா/கோ/4733 | திரு. மாதன் சண்முகசுந்தரம் |
| 235யா/கோ/4754 | திரு. சின்னையா இராசா |
| 236யா/கோ/4764 | திரு. தம்பு துரைசிங்கம் |
| 237யா/கோ/4772 | திருமதி. இராசமணி சுந்தரலிங்கம் |
| 238யா/கோ/4784 | திருமதி. சோதிப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| 239யா/கோ/4790 | திரு. வேலாயுதம் சந்திரசேகரம்பிள்ளை |
| 240யா/கோ/4791 | திருமதி. சரஸ்வதி இராசரத்தினம் |
| 241யா/கோ/4800 | திருமதி. சிவப்பி வேலன் |
| 242யா/கோ/4821 | திரு. காசிப்பிள்ளை சின்னையா |
| 243யா/கோ/4867 | திரு. கந்தையா வேலாயுதம் |
| 244யா/கோ/4884 | திரு. வல்லிபுரம் யோகசு[illegible]ம் |
| 245யா/கோ/4899 | திரு. குமாரசாமி பாலசுப்பிரமணியம் |
| 246யா/கோ/4913 | திரு. சேதுபதி கனகசபாபதி |
| 247யா/கோ/4921 | திரு. சிவலை கிருஷ்ணன் |
| 248யா/கோ/4945 | திரு. இளையகுட்டி சுப்பிரமணியம் |
| 249யா/கோ/4974 | திரு. முதலி கந்தையா |
| 250யா/கோ/5036 | திரு. ஆபிரகாம் இப்பன் |
| 251யா/கோ/5045 | திரு. செல்வரத்தினம் கணேசு |
| 252யா/கோ/5049 | திரு. சண்முகம் அமிர்தலிங்கம் |
| 253யா/கோ/5094 | திரு. கனகசபை குககுமாரராசா |
| 254யா/கோ/5121 | திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியராசா |
| 255யா/கோ/5129 | திரு. சிவகுருநாதன் நித்தியானந்தன் |
| 256யா/கோ/5145 | திரு. முத்தையா பேரம்பலம் |
| 257யா/கோ/5154 | திருமதி. பூமணி இரத்தினம் |
| 258யா/கோ/5191 | திருமதி. இராசமணி ஐயாத்துரை |
| 259யா/கோ/5193 | திருமதி. செல்வநாயகி வேலாயுதபிள்ளை |
| 260யா/கோ/5215 | திரு. கனகசபை ஸ்கந்தராசா |
| 261யா/கோ/5223 | திருமதி. சிவபாக்கியம் இராசஇரத்தினம் |
| 262யா/கோ/5244 | திரு. நமசிவாயம் சுந்தரமூர்த்தி |
| 263யா/கோ/5271 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தவனம் |
| 264யா/கோ/5282 | திரு. செல்லையா வெற்றிவேலு |
| 265யா/கோ/5294 | திரு. செல்லத்துரை யோகரட்ணம் |
| 266யா/கோ/5298 | திரு. செல்லன் அப்புத்துரை |
| 267யா/கோ/5304 | திரு. சின்னத்தம்பி வல்லிபுரம் பாலசிங்கம் |
| 268யா/கோ/5367 | திரு. வேலன் தம்பையா |
| 269யா/கோ/5419 | திரு. சின்னத்தம்பி செல்லத்துரை |
| 270யா/கோ/5420 | திரு. நாகமுத்து சீவரத்தினம் |
| 271யா/கோ/5435 | திருமதி. மகேஸ்வரி சின்னப்பு |
| 272யா/கோ/5443 | திருமதி. செங்கமலம் துரைசிங்கம் |
| 273யா/கோ/5466 | திருமதி. திலகேஸ்வரி குணசிங்கம் |
| 274யா/கோ/5473 | திரு. வயிரமுத்து வேலாயுதபிள்ளை |
| 275யா/கோ/5490 | திருமதி. ஞானரத்தினம் செல்வரத்தினம் |
| 276யா/கோ/5504 | திருமதி. கனகம்மா பொன்னுத்துரை |
| 277யா/கோ/5510 | திரு. அருணாசலம் கனகசபை தருமலிங்கம் கிருஷ்ணரசா |
| 278யா/கோ/5522 | திரு. வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம் |
| 279யா/கோ/5529 | திருமதி. நவலட்சுமி தவராசா |
| 280யா/கோ/5546 | திருமதி. புஷ்பமலர் மயில்வாகனம் |
| 281யா/கோ/5550 | திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம் |
| 282யா/கோ/5576 | திருமதி. சோதிமணி சச்சிதானந்தர் |
| 283யா/கோ/5596 | திருமதி. சிவயோகம் சுப்பிரமணியம் |
| 284யா/கோ/5626 | திரு. நவரட்ணம் தவநீதராஜா |
| 285யா/கோ/5658 | திருமதி. அன்னம்மா இரத்தினம் |
| 286யா/கோ/5690 | திருமதி. சின்னப்பிள்ளை செல்லையா |
| 287யா/கோ/5691 | திரு. கதிரன் பொன்னுத்துரை |
| 288யா/கோ/5698 | திருமதி. சிவபாக்கியம் தம்பிராசா |
| 289யா/கோ/5706 | திரு. கதிரன் செல்லன் |
| 290யா/கோ/5707 | திரு. தேவகேசன் தியடோர் |
| 291யா/கோ/5725 | திரு. வல்லிபுரம் ஆறுமுகம் |
| 292யா/கோ/5740 | திரு. சின்னையா ஜெகநாதன் |
| 293யா/கோ/5742 | திரு. சபாபதி கனகராசா |
| 294யா/கோ/5745 | திரு. பொன்னுத்துரை குணசிங்கம் |
| 295யா/கோ/5748 | திருமதி. கணேஸ்வரி மகோதயலிங்கம் |
| 296யா/கோ/5762 | திருமதி. கமலாம்பிகை கிருஷ்ணசாமி |
| 297யா/கோ/5818 | திருமதி. பத்மாவதி கனகரட்னம் |
| 298யா/கோ/5825 | திரு. பொன்னுத்துரை இராமச்சந்திரன் |
| 299யா/கோ/5828 | திருமதி. இராசபூரணி செல்வரத்தினம் |
| 300யா/கோ/5830 | திரு. பொன்னுத்துரை சிங்கராசா |
| 301யா/கோ/5845 | திரு. இரத்தினம் செல்வநாயகம் |
| 302யா/கோ/5861 | திரு. இராசையா சுப்பிரமணியம் |
| 303யா/கோ/5868 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| 304யா/கோ/5920 | திருமதி. பூரணம் இராசன் |
| 305யா/கோ/5959 | திருமதி. அரியமலர் முத்துராசா |
| 306யா/கோ/5987 | திரு. தம்பிப்பிள்ளை கணேசபிள்ளை |
| 307யா/கோ/5989 | திரு. சரவணமுத்து கந்தசாமி |
| 308யா/கோ/5994 | திரு. செல்லையா குஞ்சிதபாதம் |
| 309யா/கோ/6000 | திருமதி. மீனாம்பிகை கணேசலிங்கம் |
| 310யா/கோ/6037 | திரு. நடராசா பரமசிவம் |
| 311யா/கோ/6053 | திருமதி. இராசாத்தி கந்தையா |
| 312யா/கோ/6054 | திரு. தம்பையா இரத்தினசபாபதி |
| 313யா/கோ/6076 | திரு. செல்லையா சின்னத்துரை |
| 314யா/கோ/6088 | திரு. சிவக்கொழுந்து சீனிவாசகம் |
| 315யா/கோ/6137 | திரு. சாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள் |
| 316யா/கோ/6182 | திரு. செல்லத்துரை கணேசமணி |
| 317யா/கோ/6210 | திருமதி. உதயமணி மயில்வாகனம் |
| 318யா/கோ/6211 | திரு. சீனிவாசகம் சற்குணானந்தம் |
| 319யா/கோ/6255 | திருமதி. அன்னலட்சுமி நடராசா |
| 320யா/கோ/6289 | திருமதி. ஞானபூபதி அருளம்பலம் |
| 321யா/கோ/6303 | திருமதி. மகேஸ்வரி வேலாயுதபிள்ளை |
| 322யா/கோ/6308 | திருமதி. பரமேஸ்வரி இளையதம்பி |
| 323யா/கோ/6310 | திரு. சிவக்கொழுந்து சுப்பிரமணியம் |
| 324யா/கோ/6321 | திருமதி. முத்தம்மா இரத்தினசபாபதிப்பிள்ளை |
| 325யா/கோ/6346 | திரு. மரியாம்பிள்ளை பிலிப் இராஜநாயகம் |
| 326யா/கோ/6350 | திருமதி. புவனேஸ்வரி செல்லத்துரை |
| 327யா/கோ/6391 | திரு. செல்லையா தங்கராசா |
| 328யா/கோ/6422 | திருமதி. நகுலேஸ்வரி சதாசிவம் |
| 329யா/கோ/6427 | திருமதி. சிதம்பரநாயகி கார்திகேசு |
| 330யா/கோ/6442 | திருமதி. திரேசாறீற்ம்மா அமரசிங்கம் |
| 331யா/கோ/6449 | திருமதி. செல்லாச்சிப்பிள்ளை சச்சிதானந்தன் |
| 332யா/கோ/6485 | திரு. கந்தையா கனகரத்தினம் |
| 333யா/கோ/6509 | திரு. வல்லி செல்லையா |
| 334யா/கோ/6518 | திருமதி. அரியம் சிவசம்பு |
| 335யா/கோ/6522 | திருமதி. சிவநாயகி நடராசா |
| 336யா/கோ/6589 | திரு. தம்பு செல்வராசா |
| 337யா/கோ/6608 | திருமதி. சிவாம்பிகை திருநாவுக்கரசு |
| 338யா/கோ/6617 | திருமதி. திரேசம்மா மாட்டின் |
| 339யா/கோ/6621 | திரு. நாகன் கிருஷ்ணன் |
| 340யா/கோ/6623 | திருமதி. பவளம் தில்லையம்பலம் |
| 341யா/கோ/6632 | திருமதி. இராசமணி வேலுப்பிள்ளை |
| 342யா/கோ/6640 | திருமதி. அருளம்மா திருச்செல்வம் |
| 343யா/கோ/6651 | திருமதி. அன்னலட்சுமி துரைராசா |
| 344யா/கோ/6663 | திருமதி. லீலாவதி நடராஜபிள்ளை |
| 345யா/கோ/6726 | திரு. வேலாயுதம் பரராஜசிங்கம் |
| 346யா/கோ/6753 | திரு. பெரியதம்பி செல்லத்துரை |
| 347யா/கோ/6764 | திருமதி. விஜயலட்சுமி முத்துத்தம்பி |
| 348யா/கோ/6789 | திருமதி. தனபாக்கியம் கதிரவேலு |
| 349யா/கோ/6793 | திருமதி. கனகம்மா விநாசித்தம்பி |
| 350யா/கோ/6800 | திரு. சண்முகம் பரஞ்சோதி |
| 351யா/கோ/6823 | திரு. நாகமணி பொன்னுத்துரை |
| 352யா/கோ/6830 | திரு. சின்னட்டி முருகன் |
| 353யா/கோ/6841 | திரு. விநாசித்தம்பி வேலாயுதபிள்ளை |
| 354யா/கோ/68[illegible] | திரு. பொன்னையா கந்தையா |
| 355யா/கோ/6880 | திருமதி. இராசம்மா பொன்னையா |
| 356யா/கோ/6885 | திரு. சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் |
| 357யா/கோ/6893 | திருமதி. அன்னப்பிள்ளை ஐயாத்துரை |
| 358யா/கோ/6911 | திரு. வேலன் இராசதுரை |
| 359யா/கோ/6931 | திரு. அ.மரியம்பிள்ளை இராசேந்திரம் |
| 360யா/கோ/6934 | திரு. மார்க்கண்டு நடராசா |
| 361யா/கோ/6935 | திருமதி. சிவக்கொழுந்து பொன்னுத்துரை |
| 362யா/கோ/6961 | திருமதி. மகேஸ்வரி பழனித்துரை |
| 363யா/கோ/6982 | திரு. சித்தன் சண்முகம் |
| 364யா/கோ/6983 | திரு. முருகன் சின்னத்துரை |
| 365யா/கோ/7000 | திரு. நாகமுத்து சின்னத்தம்பி |
| 366யா/கோ/7041 | திரு. சின்னத்தம்பி குருநாதபிள்ளை |
| 367யா/கோ/7049 | திருமதி. செல்லம்மா அருமைநாயகம் |
| 368யா/கோ/7081 | திருமதி. சிவமலர் மகேந்திரா |
| 369யா/கோ/7089 | திரு. இராமலிங்கம் ஏபிரகாம் இரத்தினராஜா |
| 370யா/கோ/7126 | திருமதி. குணமணி செல்லத்துரை |
| 371யா/கோ/7138 | திருமதி. இராசலட்சுமி சிவசாமி |
| 372யா/கோ/7217 | திருமதி. பத்மாசனி இராதாகிருஷ்ணன் |
| 373யா/கோ/7271 | திரு. சின்னத்தம்பி ஜெயராசசிங்கம் |
| 374யா/கோ/7274 | திரு. கனகரத்தினம் சபாரத்தினம் |
| 375யா/கோ/7277 | திருமதி. லட்சுமி இராசையா |
| 376யா/கோ/7298 | திருமதி. தெய்வானை கிருஸ்ணன் |
| 377யா/கோ/7332 | திரு. வைத்திலிங்கம் துரைராஜா |
| 378யா/கோ/7353 | திருமதி. சின்னம்மா இராமலிங்கம் |
| 379யா/கோ/7427 | திரு. முருகன் சைமன் |
| 380யா/கோ/7441 | திருமதி. இரத்தினம். இராசலிங்கம் |
| 381யா/கோ/7451 | திரு. ஆழ்வான் தில்லையம்பலம் |
| 382யா/கோ/7454 | திருமதி. நாகேஸ்வரி முருகேசு |
| 383யா/கோ/7462 | திருமதி. பூரணம் சுப்பிரமணியம் |
| 384யா/கோ/7516 | திருமதி. அகிலாண்டேஸ்வரி துரைராசா |
| 385யா/கோ/7522 | திரு. வயித்திலிங்கம் இராசரத்தினம் |
| 386யா/கோ/7541 | திரு. வைரமுத்து நடராசா |
| 387யா/கோ/7556 | திரு. சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை |
| 388யா/கோ/7586 | திரு. வயிரவன் ஆசீர்வாதம் |
| 389யா/கோ/7587 | திரு. சுப்பையா பொன்னம்பலம் |
| 390யா/கோ/7600 | திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை |
| 391யா/கோ/7659 | திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 392யா/கோ/7672 | திருமதி. செல்லமுத்து துரைராசா |
| 393யா/கோ/7679 | திருமதி. சற்குணசோதிமலர் சந்திரசேகரம் |
| 394யா/கோ/7689 | திருமதி. பொன்னம்மா சின்னத்தம்பி |
| 395யா/கோ/7730 | திரு. வல்லி இரத்தினம் |
| 396யா/கோ/7753 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| 397யா/கோ/7778 | திரு. வயிரவன் கந்தையா |
| 398யா/கோ/7781 | திரு. தம்பையா அருணாசலம் |
| 399யா/கோ/7818 | திரு. செல்லையா சண்முகலிங்கம் |
| 400யா/கோ/7820 | திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| 401யா/கோ/7823 | திரு. சின்னத்துரை விநாயகமூர்த்தி |
| 402யா/கோ/7828 | திரு. சின்னப்பு கந்தையா |
| 403யா/கோ/7832 | திரு. வைரவன் வல்லி |
| 404யா/கோ/7835 | திருமதி. சரஸ்வதி வைரமுத்து |
| 405யா/கோ/7859 | திரு. வல்லிபுரம் பொன்னம்பலம் |
| 406யா/கோ/7889 | திரு. சுந்தரம் நித்தியானந்தன் |
| 407யா/கோ/7935 | திருமதி. இராசம்மா நவரத்தினம் |
| 408யா/கோ/7978 | திரு. வயித்தி சீனியர் |
| 409யா/கோ/7980 | திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வம் |
| 410யா/கோ/7987 | திரு. ஆறுமுகம் கணேசு |
| 411யா/கோ/8000 | திருமதி. இலட்சுமி சின்னத்தம்பி |
| 412யா/கோ/8002 | திருமதி. துரைமணி பொன்னையா |
| 413யா/கோ/8067 | திருமதி. செல்வரத்தினம் ஆறுமுகம் |
| 414யா/கோ/8080 | திருமதி. நாகேஸ்வரி கந்தையா |
| 415யா/கோ/8098 | திரு. முத்து பொன்னுத்துரை |
| 416யா/கோ/8125 | திரு. சீனியன் வைத்திலிங்கம் |
| 417யா/கோ/8158 | திரு. வைத்தி இளையதம்பி |
| 418யா/கோ/8231 | திரு. பழனி முருகேசு |
| 419யா/கோ/8261 | திரு. தாமோதரம்பிள்ளை கந்தசாமி |
| 420யா/கோ/8297 | செல்வி. சரஸ்வதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை |
| 421யா/கோ/8301 | திருமதி. கனகம்மா முத்துராஜா |
| 422யா/கோ/8319 | திருமதி. கமலாதேவி சிவசுப்பிரமணியம் |
| 423யா/கோ/8350 | திருமதி. யோகம்மா கோவிந்தசாமி |
| 424யா/கோ/8396 | திரு. மயில்வாகனம் பரமானந்தம் |
| 425யா/கோ/8416 | திரு. சின்னத்துரை நாகேந்திரம் |
| 426யா/கோ/8453 | திரு. இளையதம்பி கனகசபை |
| 427யா/கோ/8504 | திரு. கணபதி மயிலு |
| 428யா/கோ/8542 | திரு. கந்தர் பரமு |
| 429யா/கோ/8570 | திருமதி. தங்கமுத்து கந்தசாமி |
| 430யா/கோ/8584 | திருமதி. வள்ளிநாயகி இராசதுரை |
| 431யா/கோ/8613 | திருமதி. சாந்தநாயகி இலங்கைநாயகம் |
| 432யா/கோ/8620 | திரு. கதிர்காமு இராஜலிங்கம் |
| 433யா/கோ/8708 | திரு. செல்லையா சிவஞானம் |
| 434யா/கோ/8713 | திரு. பொமியான் ஆசீர்வாதம் |
| 435யா/கோ/8718 | திரு. சீனியன் சிவமயம் |
| 436யா/கோ/8724 | திரு. சுப்பர் சோமு |
| 437யா/கோ/8731 | திருமதி. செல்வநாயகி இராசதுரை |
| 438யா/கோ/8775 | திரு. கந்தையா மகாதேவா |
| 439யா/கோ/8789 | திரு. கந்தையா இரத்தினம் |
| 440யா/கோ/8801 | திரு. செல்லையா கனகலிங்கம் |
| 441யா/கோ/8807 | திரு. சிவலை செல்லத்துரை |
| 442யா/கோ/8809 | திரு. மார்க்கண்டு தம்பிராசா |
| 443யா/கோ/8830 | திருமதி. சரஸ்வதி கந்தையா |
| 444யா/கோ/8833 | திருமதி. பொன்னம்மா செல்லத்துரை |
| 445யா/கோ/8843 | திரு. இராமலிங்கம் இரத்தினம் |
| 446யா/கோ/8844 | திரு. தம்பிமுத்து தங்கராசா |
| 447யா/கோ/8848 | திரு. இளையவர் இராசதுரை |
| 448யா/கோ/8866 | திருமதி. இராசம்மா சின்னத்தம்பி |
| 449யா/கோ/8872 | திரு. பொன்னர் நடேசு |
| 450யா/கோ/8884 | திருமதி. சவுந்தரம் இராசரத்தினம் |
| 451யா/கோ/8898 | திருமதி. பொன்னமா சேனாதிராசா |
| 452யா/கோ/8901 | திரு. இளையவி பாலசிங்கம் |
| 453யா/கோ/8905 | திரு. வைரமுத்து தவராசா |
| 454யா/கோ/8908 | திரு. வைரமுத்து தங்கராசா |
| 455யா/கோ/8911 | திரு. வேலுப்பிள்ளை கார்த்திகேசு |
| 456யா/கோ/8913 | திருமதி. ஜெகதீஸ்வரி வீரசிங்கம் |
| 457யா/கோ/8977 | திருமதி. யோகேஸ்வரி தில்லையம்பலம் |
| 458யா/கோ/9022 | திருமதி. தவமணி தம்பிஐயா |
| 459யா/கோ/9029 | திருமதி. மனோன்மணி இராசதுரை |
| 460யா/கோ/9044 | திருமதி. கனகாம்பிகை தம்பு |
| 461யா/கோ/9045 | திருமதி. பார்வதி மாணிக்கம் |
| 462யா/கோ/9071 | திரு. பொன்னம்பலம் நல்லையா |
| 463யா/கோ/9085 | திருமதி. மாரிமுத்து பழனிவேல் |
| 464யா/கோ/9106 | திரு. மயில்வாகனம் இராஜேந்திரா |
| 465யா/கோ/9112 | திருமதி. சரஸ்வதி இரத்தினம் |
| 466யா/கோ/9139 | திருமதி. தங்கம்மா விசாகநாதன் |
| 467யா/கோ/9150 | திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம் |
| 468யா/கோ/9151 | திரு. சின்னத்தம்பி அரியநாயகம் |
| 469யா/கோ/9211 | திரு. கந்தையா வேலாயுதம் |
| 470யா/கோ/9224 | திரு. கறுத்தான் செல்லத்துரை |
| 471யா/கோ/9276 | திரு. பொனிப்பாஸ் அல்வின் |
| 472யா/கோ/9312 | திருமதி. நாகபூசணி தம்பிராசா |
| 473யா/கோ/9337 | திரு. சின்னவன் கனகன் |
| 474யா/கோ/9372 | திரு. இராமலிங்கம் விவேகானந்தம் |
| 475யா/கோ/9374 | திருமதி. தங்கலட்சுமி செல்வரட்ணம் |
| 476யா/கோ/9449 | திருமதி. இராஜேஸ்வரி சரவணமுத்து |
| 477யா/கோ/9454 | திரு. கதிரவேலு இரத்தினம் |
| 478யா/கோ/9479 | திரு. கந்தையா அருளையா |
| 479யா/கோ/9553 | திரு. வேலுப்பிள்ளை அருணசலம் |
| 480யா/கோ/9567 | திருமதி. வள்ளியம்மாள் இராசநாயகம் |
| 481யா/கோ/9583 | திருமதி. றோசம்மா இராசதுரை |
| 482யா/கோ/9585 | திரு. தம்பையா காராளசிங்கம் |
| 483யா/கோ/9590 | திரு. தம்பிஐயா சாம்பசிவம் |
| 484யா/கோ/9655 | திரு. தம்பிஐயா சிவஞானம் |
| 485யா/கோ/9678 | திரு. பெரியான் பொன்னன் |
| 486யா/கோ/9812 | திருமதி. பூமணி சுப்பையா |
| 487யா/கோ/9865 | திருமதி. ஆச்சிமுத்து கனகசபை |
| 488யா/கோ/9867 | திருமதி. இராசேஸ்வரி சிவசுப்பிரமணியம் |
| 489யா/கோ/9895 | திரு. கந்தன் கிருஷ்ணன் |
| 490யா/கோ/9930 | திரு. சங்கரப்பிள்ளை சண்முகநாதன் |
| 491யா/கோ/9932 | திரு. சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் |

(வளரும்)

## தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்

பதிவு இல. J/2063 - (வ-து)

### புனரமைப்பு அறிவித்தல்

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைக்கப்பட்டு மேற்படிச் சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உறுப்புரிமை உள்ளவர்கள் 30-11-2005 புதன்கிழமைக்கு முன் வருகை தந்து உறுப்புரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி நிர்வாகம் கேட்டுக் கொள்கின்றது. உறுப்புரிமையைச் சான்றுபடுத்த தேசிய அடையாள அட்டையையும் சங்கத்தால் முன்னர் வழங்கப்பட்ட ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் எடுத்து வருதல் உறுப்புரிமை உறுதிப்படுத்தலை விரிவுபடுத்தும்.

புதிய உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். கிழமை நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை தொடர்பு கொள்ளவும்.

(இடம்:- கால்நடை வைத்தியர் அலுவலகம், சாவகச்சேரி)

**பொ.குமாரசாமி**
செயலாளர்

(சி-45958)(21-32-17-15)

## உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



''நாகேஸ்வரம்'', அளவெட்டி மேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த

**செல்வி**
**வரதவாணி திருச்செகநாதன்**

அவர்கள் 06.10.2005 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சிறப்புக் கலைமாணி B.A(Hons) பட்டம் பெற்றுக் கொண்டமையையிட்டு உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**அன்பு அம்மப்பா**
(கலாநிதி அருட்கவி.சீ.விநாசித்தம்பி M.A.),
**பெரியப்பா (த.குணபாலசிங்கம்) குடும்பம்.**

**நாகேஸ்வரம், அளவெட்டி**

(42016)(32-17-15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற விடத்தற்பளையைச் சேர்ந்த

தபோதினி வேலுப்பிள்ளை [B.Sc. (Hons)]
(Sp.Degree in Zoology)

தயாநிதி வேலுப்பிள்ளை [B.A.(Hons)]
(Sp.Degree in Economics)

இருவரையும் சம்பாவெளிப் பிள்ளையார் அருளால் மேலும் பல சிறப்புகள் பெற்று மேன்மையுடன் திகழ மனமார வாழ்த்துகின்றோம்.

**சி.நெடுஞ்செழியன்**
**சி.ரஜிதா**

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி-45959)(21-32-17-15)

# MEGA OFFER

# மாபெரும் சலுகை

உங்கள் சிலமணி நேரத்தினை SAAMSTECH இல் செலவுசெய்வதன் மூலம் உங்கள் ஆங்கிலத்தேவையை பூர்த்திசெய்யுங்கள்

இதுவரை பாடசாலைகளிலும் தனியார்வகுப்புகளிலும், பல்கலைக்கழகத்திலும் கற்பிக்கப்படும் ஆங்கிலம் இலக்கணரீதியான சிந்தனைமூலமாக கதைக்கமுடியாத நிலையினை ஏற்படுத்துகிறது. SAAMSTECH இன் இலகுபடுத்தப்பட்ட ஆங்கிலம் அடிப்படை வசனங்களில் தேர்ச்சி, பழக்கப்படுத்தல் மூலமான விருத்தியாக்கம், பிரயோகங்கள் மூலமான தொடர்ச்சியான வசன உருவா[illegible]கம் மூலமாக இலகுவாக கதைத்தலையும் ஆங்கிலத்தில் முழுமையான தேர்ச்சியினையும் ஏற்படுத்துகிறது.

**SAAMSTECH இன் நேரடிவகுப்புக்கு பதிவுசெய்வோருக்கு மாபெரும் சலுகை**

**எதிர்வரும் தைமாதம் நடைபெறவுள்ள நாடு தழுவிய தேசிய ஆங்கில டிப்ளோமாவுக்கான பாடநெறி**

SAAMSTECH இன்
## FAST ENGLISH

**காலம் : 3 மாதங்கள்**

**கட்டணம் : 3000/- மட்டும்**

காலை 6.30 முதல் மாலை 7.30 வரை ஒவ்வொரு மணிநேரமும் வாரத்தில் மூன்று நாட்கள் மற்றும் வார இறுதி வகுப்புக்கள். பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், ஏனையோருக்கு தனித்தனி வகுப்புகள்

இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்

**இன்றும் நாளையும் மட்டும்**

## இலவசம்

**இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான கீழ்வரும் புத்தகங்கள், CD என்பன இலவசம்**

ஆசிரியர்கள் , அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கான
**அன்றாட ஆங்கிலம்**

தேசிய ஆங்கில டிப்ளோமாவுக்கான
**12 Book Collection**

தேசிய ஆங்கில டிப்ளோமாவுக்கான
**22 Book Collection**

மாணவர்களுக்கான ஆங்கிலம்
**English Book**

**DASGRID Book**

15 அலகுகளுக்கான ஆங்கிலம்
**Audio Training CD**

இச்சலுகை இன்றும் நாளையும் மட்டும்

## SAAMSTECH

841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

## தொழில் பயிற்சி நெறி

**WUSC** **NVDAG**

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையும் (WUSC) அறவழிப் போராட்டக் குழுவும் (NVDAG) இணைந்து தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ''[illegible]ன் இணைப்புப் பயிற்சி'' நெறியை நவம்[illegible] 21ஆம் திகதி முதல் ஆறுமாதங்கள் கைதடி நுணாவிலில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

[illegible]ப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள விரும்[illegible] 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் - யுவதிகள் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு 31.10.2005 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்,**
அறவழிப் போராட்டக்குழு,
த.பெ.இல.2, சாவகச்சேரி.

**அறவழிப்போராட்டக்குழு**
(NVDAG)

(42015)(32-17-15)

**கடின வேலைக்கு உகந்தவை**

## Einhell®

With German Technology

Power Tools




ஏக முகவர்கள்
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேற்) லிமிட்டட்**
காட்சியறை : 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ் : 2446554
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்.
95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



**யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்**


**தீபாவளியை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்**

# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள் அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்



(சி/45818)

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையில் - இலங்கை தொழில்நுட்பவியல் சேவை குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ', இலங்கை தொழில்நுட்பவியல் சேவை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2005

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

II. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ'

சம்பள அளவுத்திட்டம்
பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 9/2004இற்கு அமைய
ரூபா 105,840 - 7X1,320 - 10X1,560 - 130,680/= (TB-3-1-1)

கல்வித் தகைமைகள்:
இலங்கை விலங்கு வேளாண்மைக் கல்லூரியினால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானது என வடக்கு - கிழக்கு மாகாணப்பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சான்றிதழ்

எழுத்துப் பரீட்சை
இப்பரீட்சைகள் தமிழ்/சிங்களம் ஆகிய இருமொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:

*1. பொதுஉளச்சார்பு — 1 மணித்தியாலம் — 100 புள்ளிகள்*
சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்பைப் புரிந்துகொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

*2. பொதுஅறிவு — 1 மணித்தியாலம் — 100 புள்ளிகள்*
இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்.
பகுதி I
சூழல், உலக விஞ்ஞான அறிவு, அரசியல், சமூக, கலாசார, பொருளியல் சார்ந்த தகவல்கள் தொடர்பாக உள்ள பரீட்சார்த்திகளின் அறிவையும் தெளிவையும் அளவிடுதல்.
பகுதி II
இவ்வினாத்தாள் விலங்கு வேளாண்மை சம்பந்தமான அறிவை பரீட்சிப்பதாக அமையும்.
நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்கு குறையாமல் பெறப்படுதல் வேண்டும் எனினும் இப் பரீட்சையில் பெற்றபுள்ளிகளின் திறமை அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும்.

**வே.பொ.பாலசிங்கம்,**
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் ..............................
பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2005

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பதவி :

குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' [ ]

கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' [ ]

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி :-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

03. தபால் முகவரி:-
தமிழில் :- ....................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :- ....................................

04. அடையாள அட்டை இல. [ | | | | | | | | | ]

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ் T ; சிங்களம் S [ ]
06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்: [ ]
(07 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

07. பால்:- ஆண் M [ ] பெண் F [ ]

| 08. பிறந்த திகதி: | வருடம்: | மாதம்: | திகதி : |
|---|---|---|---|
| 2005.11.14ஆம் திகதியன்று வயது | வருடங்கள்: | மாதங்கள்: | நாள்கள்: |

09. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]
முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

10. நீங்கள் இலங்கைப் பிரஜையா? ஆம் / இல்லை [ ]

11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலாளர் பிரிவு :-
(3) வதியும் கால எல்லை: தொடக்கம்- வரை-
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின, தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம் : மாகாணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம் : திகதி :

12. கல்வித்தகைமைகள் :

(I) பட்டத்தின் வகையும் :- ....................................
(II)பட்டம் பெற்ற திகதி :- ....................................
(III) பல்கலைக்கழகம்/விவசாயக் கல்லூரி: ....................................
(IV) பாடங்கள்:- ....................................

13. பிற கல்வி / தொழில்சார் தகைமைகள் :-

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

[ ]

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட .......................... பிரதேச செயலகத்தின் .................... ஆம் இலக்க .................... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன், என்றும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.................... ....................................
திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 128,160/- இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ....................
.................... என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ....................
ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ....................................
திகதி: கையொப்பத்தைஉறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

16. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ளவர்களின் உபயோகத்திற்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் .................... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து .................... மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத்தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம் மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ....................................
திகதி: கிராம சேவையாளர் கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி .................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் இவர் கடந்த 05 வருட சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ....................................
திகதி: திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

## சாதனையாளர்களைப் பாராட்டுகின்றோம்
## மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை

2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**புலமைப் பரிசில் பரீட்சை - 2005**

1. ஸ்ரீ.சஜீவன் - 155
2. யோ.கோமதி - 155
3. த.தயாளினி - 148
4. ர.இந்துசன் - 144
5. செ.லக்ஷிகா - 138
6. சி.கவிஜா - 133
7. ப.சிந்துஜன் - 132
8. செ.மிதுஷன் - 129
9. ப.மஞ்சுஷா - 127

**தமிழ்த் திறன்போட்டி**

1. சி.கவிஜா தரம் 5 வாசிப்பு வ.ம. 2 ஆம் இடம்
2. இ.மிதுலா தரம் 5பேச்சு கோ.ம. 2 ஆம் இடம்
3. ஸ்ரீ.சஜீவன் தரம் 5 எழுத்தாக்கம் கோ.ம. 2 ஆம் இடம்
4. த.தயாளினி தரம் 5 பாவோதல் கோ.ம.3 இடம்

**திருக்குறள் மனனம்**

1. த.தயாளினி தரம் 5 வ.ம. முதலாமிடம்

**ஆங்கிலத் தினப் போட்டி**

1. அ.அமிர்தவர்சினி தரம் 3 பாவோதல் கோ.ம. முதலாமிடம்
2. ஸ்ரீ.விஷ்ணுவரதன் தரம் 3 உறுப்பெழுத்து கோ.ம.முதலாமிடம்
3. கு.லக்ஷன் தரம் 3 உறுப்பெழுத்து கோ.ம.2 ஆம் இடம்
4. சி.கபிலன் தரம் 4 பாவோதல் கோ.ம. 3 ஆம் இடம்
5. ஜெ.மதுஷனா தரம் 5 பாவோதல் கோ.ம,3 ஆம் இடம்
6. தரம் 4 , 5 மாணவர்கள்- நாடகம் வல.ம. 2 ம் இடம்.

இந்த வெற்றிகளுக்கெல்லாம் தோன்றாத் துணையாய் நின்று அருள்பாலித்த மருதடி விநாயகரின் பாதமலர்களை வணங்குகிறோம்.

**பெற்றோர்.**

(42036)(18-32-16-19)

# வேதாகமக் கருத்தரங்கு

இலங்கை வேதாகமக் கல்லூரியினால் "குடும்ப வாழ்வின் ஒழுக்கம்" சம்பந்தமான ஒரு கருத்தரங்கு A.O.G சபை மண்டபம், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தில் 31.10.2005 - 01.11.2005 திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்கள் காலை 9.30 மாலை - 3.30 மணி வரை நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கிற்கு அனைத்து சபைப் போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இக்கருத்தரங்கில் ஆஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் Peter Lane & Dot Lane ஆகியோர் பிரதான பேச்சாளர்களாகக் கலந்துகொள்கின்றனர்.

★ **பதிவுக்கட்டணம் ரூபா 200**
(மதிய உணவு, தேநீர், பாடப்புத்தகம் உள்ளடங்கலாக)

மேலதிக தொடர்புகளுக்கு:
இலங்கை வேதாகமக் கல்லூரி சார்பாக
J. லொறிங்ரன்,
எபநேசர் ஆலயம்,
வட்டுக்கோட்டை.
T.P.: 2225285,
0779000138.

**J.ஜோன்சன்,**
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
89, பிறவுண் வீதி,
கொக்குவில்.
021 222 2930

(41997)(42-32-16-19)

## அகவை அறுபத்தேழில் ஆறாம் மாத நினைவுகள்

*மண்மடியில்* 28 - 10 - 1938



*விண்ணகத்தில்* 31 - 03 - 2005

### அமரர் செல்லையா மாணிக்கம்

*(உரிமையாளர், ஆனந்தா ஸ்ரோர்ஸ், நெல்லியடி)*

ஊர் உலகம் சுற்றம் போற்றிய உத்தமரே!
இவ்விடம் விட்டு இறையுலகம் சென்று
ஆறுமாதங்கள் ஆகியும் ஆறாது உம்நினைவு
மாறவில்லை மாணிக்கத்தின் நிழலோட்டங்கள்
அகவை அறுபத்தேழில் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காய் ஈரவிழிகளுடன் பிரார்த்திக்கின்றோம்

முருகன் கோயில்வீதி,
கொல்லன் தோட்டம், நெல்லியடி. (41970)(42-32-16-19)

***குடும்பத்தினர்.***

## மகாஜனாவில் முன்னாள் அதிபர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.28

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிப ரி.ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பரிவு பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் ச.சிறிபவானந்தராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கி. குணாளசிங்கமும் கௌரவ விருந்தினராகக் கலாநிதி சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்வர்.

நினைவுப்பேருரையைத் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் வழங்குவார். (ஓ-202)

## கன்னியர் மடம் ம.வி. விஞ்ஞான தினம்

வலி.தெற்கு,ஒக்.28

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

உயர்தர விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியின் போது "பரிதிச் சுடர்" என்ற மலர் வெளியீடும் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதுடன் 'பரிதிச் சுடர்' நூலையும் வெளியிட்டு வைப்பார்.

யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல் துறைத் தலைவர் கலாநிதி சி.சிறிசற்குணராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூலின் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

"ஓசோன் படலத்தின் இன்றைய நிலை" என்ற தலைப்பில் மாணவர்களால் வில்லுப் பாட்டும் நடத்தப்படவுள்ளது. (ஓ-152)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் கலந்துகொள்வார். (ஓ-202)

## கூரைத்தகடுகள் வழங்கத் திட்டம்

வலி.தெற்கு,ஒக்.28

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் உள்ள முள்ளி கிராமத்தில் வாழும் 180 குடும்பங்களுக்கு வீட்டுக் கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவின் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ச.சந்திரராசா இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தரின் பரிந்துரைக்கமையக் கூரைத்தகடுகள் வழங்குவதற்கான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இடம்பெற்ற கடும் மழை காரணமாகக் கூரைகள் சேதமடைந்த குடும்பங்களுக்கே இவை வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-152)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**தன்சிகா மதியழகன்**
*(மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை)*
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2005 இல் சித்தியடைந்த செல்வி ம.தன்சிகாவைப் பாராட்டி வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

நிர்வாகிகளும் மக்களும்
வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையம்,
தெல்லிப்பழை.

(42024)(42-32-16-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


ப.திலீபன் B.A(Hons)


அ.அவிதன் B.A


ரி.ஜெகதீபன் B.FA


அ.வசிகரன் B.BA(Hons)


மே.செல்வந்தினி B.A(Hons)


மு.பகீரதி B.Music


ப.கோஜந்

(யா கரணவாய் மணியகாரன் அ.த.க.பா)

யாழ் பல்கலைக் கழகத்தின் 21வது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இவர்களையும் 2005 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த இவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அண்ணாசிலையடி,
கரணவாய்.

வல்லுவர் சனசமூக நிலையம்
இளைஞர் விளையாட்டுக் கழகம்
அம்பாள் அறநெறிப்பாடசாலை
சிக்கன கடன் வழங்கு கூ.சங்கம்
வல்லுவர் மகளிர் அபிவிருத்தி சங்கம்

## *அகில இலங்கை டி.ஏ.எம்.பட்டதாரிகள் வைத்தியர் சங்கம்*

### கலந்துரையாடல்

**காலம்:** நாளை (29.10.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு
**இடம்:** இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்
**நிகழ்ச்சி:** 1.இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்.
2.மேலதிகமான் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள்.
**குறிப்பு:** இலங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற அனைத்து வைத்தியர்களையும் ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலைவர்,*
Dr.க.நவரத்தினம்,
*222, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உப செயலாளர்
Dr.S.T. சிங்க ஆரியரட்ணம்
வட்டு.தெற்கு வட்டுக்கோட்டை.

(42039)(42-32-16-19)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்

28.10.2005




*கைதடி கிழக்கைச் சேர்ந்த*
**பூபாலரஞ்சன் - நந்தினி**
*தம்பதியரின் செல்வப்புதல்வி*

*சாருஜா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (28.10.2005) தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். கைதடி வீரகத்தி விநாயகப் பெருமானின் அருள்பெற்று பல்கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென உறவினர்கள் எல்லோரும் சாருக்குட்டியை வாழ்த்துகின்றனர்.*

(41974)(42-32-16-19)

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**இரு அரசியல் தலைவர்களும் சித்தாலேப வைத்தியரின் அரசியல் தத்துவத்தை பின்பற்றுகிறார்கள். இவை நான் ஜனாதிபதியானவுடன் அரசியல் கட்சிகள் ஒன்றிணைவதற்கான முதல் அறிகுறி. நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

போரை முடிவிற்கு கொண்டு வருவார் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

S.V.H.


நாட்டுப்பற்றாளர் கௌரவம்....


யாழ். இந்துக் கல்லூரியின் மரியாதை...


குடும்பத்தினர் சோகம்...


ஆசானுக்கு அஞ்சலி...


அணிவகுப்பு மரியாதை


இறுதி ஊர்வலம்...

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுபெற்ற அதிபரும் உயிரியல் விஞ்ஞான எழுத்தாளருமான நாட்டுப்பற்றாளர் சி.குகதாஸனின் இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள் :பகீரதன்)


மாணவர் தோளில்...

# நாட்டுப்பற்றாளர் குகதாஸனின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

மூத்த கல்விமானும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுபெற்ற அதிபரும் உயிரியல் விஞ்ஞான எழுத்தாளருமாகிய நாட்டுப்பற்றாளர் சி.குகதாஸனின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு யாழ்.அரசடி வீதி, நீராவியடியில் அமைத்துள்ள அன்னாரது இல்லத்தில் சமயக் கிரியைகள் நடைபெற்றன.

அதிபர் குகதாஸனின் பூதவுடலுக்கு தமிழீழ தேசியக் கொடி போர்க்கப்பட்டு நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கப்பட்டது. தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.சந்திரசேகரா தமிழீழத் தேசியக் கொடியைப் போர்த்தினார். பூதவுடலுக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் கொடியும் போர்க்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கல்விச் சமூகத்தினர் மற்றும் பெரியோர்கள் மலர் மாலை அணிவித்தும் மலர் வளையங்களை வைத்தும் அதிபரின் பூதவுடலுக்குஅஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இரங்கல் உரைகளை தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.சந்திரசேகரா, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சி.குமாரவடிவேல், வைத்திய கலாநிதி யோகேஸ்வரன், யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி உட்படப் பலர் ஆற்றினார்கள்.

இதன் பின்னர் நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், கல்விச் சமூகத்தினர் அணி வகுத்துச்செல்ல ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டு பின்னர் கோம்பையன்மணல் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (8-12)

# உலக வரைபடத்தில் இருந்து இஸ்ரேல் நாட்டை நீக்குவோம்!

## ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு; மேற்கு நாடுகள் கண்டனம்

தெஹ்ரான்,ஒக்.28

இஸ்ரேல் என்ற நாட்டை உலக வரைபடத்தில் இருந்து துடைத்தெறியவேண்டும் என்று ஈரான் ஜனாதிபதி முகமட் அகமட் நிஜாட் தெரிவித்தார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் மாணவர்கள் மத்தியில் 'சியோனிசம் அற்ற உலகம்' என்ற தலைப்பில் உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி,

"இஸ்லாமிய உலகத்துக்கெதிராக மேற்கு நாடுகளால் உருவாக்கப்பட்ட நாடுதான் இஸ்ரேல்.

"இஸ்ரேல் என்ற நாட்டை உலக வரைபடத்திலிருந்து துடைத்தெறிய வேண்டும். இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரித்த இஸ்லாமிய நாடுகள் தமது மக்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்கவேண்டி வரும்.

"இஸ்ரேலுடன் எந்தவகையான உடன்பாட்டையும் மேற்கொள்ளும் எந்த நாடும் இஸ்லாமிய உலகத்தை சரணடையவைக்கும் முயற்சியிலேயே ஈடுபடுவதாகக் கருதவேண்டும்"- என்றார்.

இக் கருத்துக்கு மேற்கு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.


முகமட் அகமட் நிஜாட்

ஈரான் ஜனாதிபதியின் இந்தக் கருத்துக் குறித்து பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், கனடா ஆகிய நாடுகள் விளக்கம் கேட்டு தமது தூதரக அதிகாரிகளை மீள அழைத்துள்ளன.

ஈரான் தனது அணுத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடனேயே இந்தக் கருத்தை முன்வைத்துள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

இது ஆழமான குழப்பத்துக்கும், கண்டனத்துக்குரியதுமாகும் என்றார்.

(க)

# இஸ்ரேலில் குண்டுவெடிப்பு ஐந்து பேர் பலி; பலர் காயம்!

இஸ்ரேலின் கரையோர நகரமான ஹதேராவிலுள்ள சந்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயமடைந்தனர்.

சனநெரிசல் மிக்க சந்தைப்பகுதியில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. உயிரிழந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் அப்பகுதிக்கு விரைந்துவந்த மீட்புக் குழுவினர் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதில், பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் இஸ்ரேலில் இடம்பெற்றுள்ள முதல் குண்டுத்தாக்குதல் இதுவாகும் என இஸ்ரேல் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய ஜிஹாத் என்ற பலஸ்தீன தீவிரவாத அமைப்பு உரிமைகோரியுள்ளது. இந்த அமைப்பின் ஆயுதப்பிரிவுத் தலைவர் இஸ்ரேல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமைக்குப் பழிவாங்கவே இத்தாக்குதலை மேற்கொண்டதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பலஸ்தீன தலைமைப் பேச்சாளரான சயீப் எர்காத் இந்தத் தாக்குதலைக் கண்டிப்பதாகவும் இது தற்போதைய அமைதிச் சூழலைக் குழப்பும் நோக்குடையது எனவும் தெரிவித்தார்.

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறிய பின்னரும் இரு தரப்பினருக்குமிடையே சில மோதல் சம்பவங்கள் தொடர்ந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(க)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte.
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86.PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakacheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47.Kandy Road.
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


# சிரியா மீது பொருளாதாரத் தடை முஸ்தீபு அமெ., பிரிட்டன், பிரான்ஸ் அச்சுறுத்தல்

லண்டன், ஒக். 28

லெபனான் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி கொலை வழக்கு குறித்து விசாரிக்கும் சர்வதேச விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு அளிக்காவிட்டால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று சிரியா நாட்டுக்கு அமெரிக்கா உட்பட சில நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக வரைவுத் தீர்மானம் ஒன்றையும் ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் சுற்றுக்கு விட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் பெய்ரூட்டில் நடந்த கார்க்குண்டு வெடிப்பில் லெபனான் நாட்டின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி கொல்லப்பட்டார். இந்தப் படுகொலைக்குப் பின்னணியில் சிரியா நாட்டு அதிகாரிகள் உள்ளனர் என்று சந்தேகம் எழுந்தது. இது குறித்து சர்வதேச விசாரணைக்குழு விசாரித்து வருகின்றது. ஆனால், இந்தக் குழுவுக்கு சிரியா ஒத்துழைப்பு அளிக்க மறுத்து வருகிறது. விசாரணைக் குழுவின் தலைமை அதிகாரி டெல்லிவ் மெக்கிஸ், 'விசாரணைக்கு சிரியா ஒத்துழைக்க மறுக்கிறது' என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையில் புகார் அளித்தார்.

இதைத் தொடர்ந்து சிரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகள் முன்வந்துள்ளன. இது தொடர்பான வரைவுத் தீர்மானம் ஒன்றையும் உறுப்பு நாடுகளின் பார்வைக்கு அனுப்பிவைத்துள்ளன.

(க)

# தமிழ்த்திரை நட்சத்திரங்களின் வீடுகளில் வருமானவரித்துறை அதிரடிச் சோதனை

சென்னை, ஒக்.28

தமிழ் சினிமா நட்சத்திரங்களின் வீடுகளில் இந்திய வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

நடிகர்கள், இசையமைப்பாளர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்களின் வீடுகளில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தப்பட்டது.

விக்ரம், விஜய், விவேக், திரிஷா, சினேகா மற்றும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், சிம்பு, ஜெயம் ரவி, தனுஷ், சினேகா, இசையமைப்பாளர்கள் யுவன் ஷங்கர் ராஜா, ஹரிஸ் ஜெயராஜ், இயக்குநர்கள் ஷங்கர், எஸ்.ஜே.சூர்யா, தயாரிப்பாளர்கள் ஒஸ்கார் ரவிச்சந்திரன், பங்கஜ மேத்தா, 'சந்திரமுகி' படத்தின் வெளிநாட்டு உரிமையை வாங்கிய சஞ்சய் ஆகியோரின் வீடுகளிலும் சோதனை நடைபெற்றது.

சோதனையில் வருமானத்துக்கு அதிகமான சொத்து, நகை சேர்த்துள்ளது தொடர்பான முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலையில் தொடங்கிய சோதனை இரவு வரை தொடர்ந்தது. சமீபகாலமாக நடிகர்கள் கோடிக்கணக்கில் சம்பளம் பெறுவதாக செய்திகள் வெளிவந்தன.

இதையடுத்து வருமான வரித்துறை அதிகாரிகள் இந்த அதிரடிச் சோதனைகளை மேற்கொண்டனர். வருமானவரிக் கணக்குகள், பணவரவுகள் சம்பந்தமான ஆவணங்கள், வங்கி இருப்புகள், நகை, பணம் ஆகியவற்றைப் பற்றி தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

பல முக்கிய ஆவணங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

28 - 10 - 2005




சிவகீதன் விநோபா தம்பதியரின் செல்வப் புதல்வி கௌசிகா அவர்கள் இன்று (28.10.2005) வெள்ளிக்கிழமை தனது மூன்றாவது பிறந்தநாளை அல்வாய் தெற்கு அல்வாயில் உள்ள இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, டோகாவில் இருக்கும் மாமன்மார், மட்டுவிலில் இருக்கும் மாமா, சித்தி, பெரியம்மா ஆகியோர் மாலுசந்தி பிள்ளையாரின் அருள்பெற்று, பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தோப்பு ஒழுங்கை, மட்டுவில். தருமராசா குடும்பத்தினர். (கிளி)

(42032)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவியும் திரு.திருமதி இராஜசிறிப்பிரியா தம்பதிகளின் புதல்வியுமாகிய



செல்வி

## இராஜசிறிப்பிரியா பிரியங்கா

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி எய்தியமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மென்மேலும் பல்கலைகளும் பெற்று மேன்மையுற்று வாழ ஆண்டவனை வேண்டுகின்றோம்.

74/9, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். (42056)(32-26-19-17)

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா மற்றும் குடும்பத்தவர் அனைவரும்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 30 – 06 – 1975

இறைவன் அணைப்பில் 28 – 10 – 2003



## செல்வன் சோதிலிங்கம் திருக்குமார்

(THIRU)

அகிலத்தில் எம்மையெல்லாம் ஆறாத துயரமதில்
ஆழ்த்திவிட்டு நீ சென்று மறைந்ததேனோ?
நீ இல்லையென்று நாள்தோறும்
உன் நினைவில் மூழ்கியிருப்பதனால்
என்றும் எம் உள்ளத்தில் வாழும் உன் உருவம்
ஒருமுறைதான் முன்னாலே வந்தால்தான் ஆகாதோ?
என்று நாம் ஏங்கி இரு விழி நீர் சொரிந்து நிற்க
வானுலகை விட்டு இங்கே வாராதிருப்பதேனோ?

வரும் வழியை விழிபார்த்து ஏங்கி நாம்
இங்கிருந்து அரன் பாதம் தொழுகின்றோம்
அவன் நிழலில் உன் ஆன்மா
என்றும் சாந்திபெற்று
நீங்காது வாழ்ந்திருக்க...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிவப்பிரகாச வித்தியாசாலை, வல்லை வீதி, சங்கானை. (42058) (24-26-19-17)

நீங்கா நினைவுகளுடன்: அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, மருமகன்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

வலிகாமம் வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானங்களில் இன்று ஆரம்பமாகின்றது.

கோட்ட மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மூன்று பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

8.30 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்.

**16 வயதுப் பிரிவு**

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

மாதகல் சென் ஜோசப் வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

மாதகல் சென் ஜோசப் வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பிற்பகல் 2மணி முதல்.

**16 வயதுப் பிரிவு**

மாதகல் சென் ஜோசப் வித்தியாலயம் எதிர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

காலை 8.30 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்-

**16 வயதுப் பிரிவு**

* கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

* கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

நண்பகல் 2.00 மணி முதல்-

**16 வயதுப் பிரிவு**

* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்.

* கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சன்னாகம் மயிலணி சைவமகாஜன வித்தியாலயம்.

(3-86-190)


# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

வி.நாகராஜ சுவாமிகள் அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்கால பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

★ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

(42029) (32-19-17)

பிள்ளையார் இன்

அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. :077 9582596.

# இந்து தர்ம ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு

ஆரம்பம் :-29.10.2005 சனிக்கிழமை(பிற்பகல் 2 மணி)

ஆசிரியர் :-S.அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(41966) (32-19-16)

# விண்ணப்பித்து விட்டீர்களா?

அமெரிக்கன் லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்தின் ஊடாக இணையத்தளத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவர்கள் டிசெம்பர் 04ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இதற்கான விண்ணப்பப்படிவம், விதிமுறைகள் என்பவற்றை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

✠ உங்களுக்கும் அதிஷ்டம் உண்டு. ஒருமுறை விண்ணப்பித்துப் பாருங்கள், வெற்றி நிச்சயம்.

✠ வெற்றி பெற்றால் விமானச் செலவுடன் அமெரிக்கா செல்லலாம்.

கட்டணம் :- 200/= மட்டுமே

## C.B Computer Academy

Station Road, Kondavil. T.P No. 021-4590291


# சங்கானை கல்விக்கோட்டம்

## சைவ கலாசார மேம்பாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

இடம் : யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்

காலம் : நாளை (29-10-2005) சனிக்கிழமை காலை 8 மணி

### நிகழ்ச்சி நிரல்

☞ காலை 8.00 மணி :- பூசையும் வழிபாடும் (பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில்)

☞ காலை 8.30 மணி :- பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் இருந்து திரு.சி.சிவகுமார் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் திருமுறைப் பாடல்களுடனும் திருவுருவப் படங்களுடனும் ஊர்வலமாக தொல்புரம் ஒழுங்கையாலாக ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை வந்தடைந்து அங்கு நடைபெறும் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து விழா மண்டபத்தை அடைதல்.

| | |
|---|---|
| ☞ காலை 9.30 மணி: | மங்கள விளக்கேற்றலும் இறைவணக்கமும் |
| ☞ காலை 9.40 மணி: வரவேற்பு நடனம் | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவிகள் |
| ☞ காலை 9.45 மணி: வரவேற்புரை | திருமதிஜெ.திருமூர்த்தி அவர்கள் [ஆசிரியர், யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.] |
| ☞ காலை 9.50 மணி: ஆசியுரை | ★ சிவஸ்ரீ ச.சுந்தரராஜக் குருக்கள் [வழக்கம்பரை, முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்] ★ பண்டிதர் சிவஸ்ரீ தி.பொன்னம்பலவாணர் [பொன்னாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு] |
| ☞ காலை 10.10 மணி: தலைமையுரை | நா.சண்முகசுந்தரம் [கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானை] |
| ☞ காலை 10.20 மணி: வாழ்த்துரைகள் | ★ திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் [பணிப்பாளர், வலிகாமம் வலயம்] ★ திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் [கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம்] ★ திருமதி தே.பாபு அவர்கள் [உப பிரதேசசெயலர், வலி-மேற்கு, சங்கானை.] ★ திரு.பொ.அச்சுதம்பிள்ளை அவர்கள் [முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை] |

☞ காலை 11.00 மணி:- விழா மலர் வெளியீடும் ஆசிரியுரையும்:- திரு.சு.சுந்தரசிவம் [பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலி.கல்வி வலயம்]

☞ காலை 11.20 மணி:- கௌரவிப்பு நிகழ்வு-சங்கானை கல்விக்கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டிற்கு அளப்பரிய சேவையாற்றிய சேவையாளர்களைக் கௌரவித்தல்.

| | |
|---|---|
| 1) திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் | [வலயக் கல்விப் பணிப்பாளர்,வலிகாமம் வலயம்] |
| 2) திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் | [ஓய்வுபெற்ற உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்] |
| 3) திரு.ஆ.வ.கணேசலிங்கம் அவர்கள் | [ஓய்வுபெற்ற சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர்] |
| 4) திரு.சி.செல்லையா அவர்கள் | [ஓய்வுபெற்ற சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர்] |
| 5) திரு.நா.சண்முகசுந்தரம் அவர்கள் | [கோட்டக் கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக்கோட்டம்] |
| 6) திரு.க.இரத்தினேஸ்வரன் அவர்கள் | [ஓய்வுபெற்ற அதிபர்,பண்ணாகம் வடக்கு அமி.த.க.பாடசாலை] |
| 7) திரு.சச்சிதானந்தம் அவர்கள் | [உரிமையாளர்,சச்சியா இரும்பகம் - வட்டுக்கோட்டை] |

☞ பகல் 11.40 மணி சிறப்புரை :- திரு.கு.சண்முகநாதன் அவர்கள் [பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாணவர் அபிவிருத்தி வலிகாமம் கல்விவலயம்]

☞ மதியம் 12மணி முதன்மையுரை:- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

☞ பகல் 12.20 மணி மாணவர் நிகழ்ச்சிகள்:- ★ மனனம், ★ பண்ணிசை, ★ புராணபடனம், ★ கதாப்பிரசங்கம்


☞ பிற்பகல் 1.20 - 2.20 மணி:- பரிசில் வழங்கல்

☞ நன்றியுரை :- திரு.வி.நடராசா அவர்கள் [அதிபர்,யா/மெய்கண்டான் மகாவித்தியாலயம்]

(42018)(26-19-17)

விழா சிறப்புற வாழ்த்துபவர்: சிற்பக்கலைஞர் கோபாலசிங்கம்,அராலி.

# மரண அறிவித்தல்



## குமாரசாமி கணேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்.தோமஸ் கல்லூரி, மாத்தளை)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மூளாய் றோட், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கணேசன் நேற்று (27-10-2005) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களாகிய குமாரசாமி- இராசம்மாவின் அன்புப் புதல்வனும் கனகரத்தினம்-சொர்ணமலரின் மருமகனும் லீலாவதி பொன்னாண்டோ (கொழும்பு)வின் அன்புச் சகோதரரும் ஜெயமணியின் அன்புக் கணவரும் வத்ஷலா (ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி), ரஞ்ஜித் (பிரான்ஸ்), விஜித் (அட்டோ கூல் எயர் மானிப்பாய்), ஷிலா, அஜித் (அஜித் போட்டோ), சந்திரஜித்(லண்டன்), லக்ஸ்மிலா (வேட்கஷா சொல்ற்வெயர்)வின் அன்புத் தந்தையும் விஜயராணியின் (பிரான்ஸ்) மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27-10-2005) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(42047)(26-19-17)

தகவல்: மூளாய் றோட், வட்டுக்கோட்டை. மனைவி, பிள்ளைகள்.

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 2005

காலம்: 28.10.2005
நேரம்: மு.ப.10. 00 மணி
இடம்: விசாலாட்சி மண்டபம்

பிரதம விருந்தினர்
திரு. கந்தையா பரமேஸ்வரன் (B.A. (Hons) SLAS - 1)
திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(42074) (54-13-34) அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



யா/கொக்குவில் மேற்கு
C. C. T. M. ஆரம்ப பாடசாலை
மாணவன்
செல்வன்
**தயாபரன் பிரவீன்**

2005ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவரை வழிநடத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர், பிரத்தியேக ஆசிரியர் திரு. அன்பழகன் என்பவர்களை நினைவு கூர்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ். (42065) (54-13-34) அம்மப்பா.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஒளிக்கலை ஒன்றிய உறுப்பினர்
கணேசன் அஜித் அவர்களின்
அன்புத்தந்தை
**குமாரசாமி கணேசன்** அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(42065) (54-13-34) ஒளிக்கலை ஒன்றியம் யாழ். மாவட்டம்.


## அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பித்த வர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

38, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 16C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993



## A/L 2007 தமிழ் (பகுதி 1)

திருவடி சூட்டு படலம் Mr. S. சிவா சனி, ஞாயிறு -3.30 p.m
* அளவை.-Mr.P.கமல் சனி, ஞாயிறு -4.30 p.m
* H.C., CHRIS, ENG.,GEO. நடைபெறுகின்றது.

(42049) SHAMROCK ஜீ சச்சமோட்டை வீதி.

## S.L.A.S | S.L.E.A.S | S.S.O

பரீட்சைகளுக்கான வகுப்புகள்
நடைபெறுகின்றன
* ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும் வகுப்புகள் D.M.I வெலிங்டன் சந்திக்கு அருகில் சனி 2-6, ஞாயிறு 10.30 -1.00 வரை நடைபெறுகின்றது. (42076)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்-இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
நுண்கலைமாணி (இசை/ நடனம்/ சித்திரமும் வடிவமைப்பும்)
**கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி-2005 /2006.**

27.10.2005 உதயன் பத்திரிகையில் வெளி வந்த மேற்படி கற்கைநெறிகள் தொடர் பான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப் பப்படிவங்களை பெறுவதற்கும் அனுப்பு வதற்குமான விபரங்கள் வருமாறு:-

விண்ணப்பப்படிவங்களை **யாழ். பல்கலைக் கழக சிறாப்பர் கருமப்பீடத்திலோ அல்லது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளையிலோ** ரூபா 150/- செலுத்திய பற்றுச் சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர் யாழ்.பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150/- பெறுமதியான காசுக் கட்டளை யுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப் பட்ட 23 X10 செ.மீ அளவுள்ள கடித உறையை **உதவிப்பதிவாளர் பரீட்சைகளும் அனுமதி களும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பு வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:**

உதவிப்பதிவாளர்,
பரீட்சைகளும் அனுமதிகளும்கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்
(27.10.2005).
(சி-45967) (54-13-34)


## ராஜா யாழ்ப்பாணம்

கடைசி வாரம் சூர்யா, அஸின், நயன்தாரா நடித்த
**கஜினி**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30 , 6.30 மட்டும்.
அடுத்த வெளியீடு: விக்ரம், அஸின், வடிவேல் நடித்த
**மஜா**

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சினிமா) காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00
அடுத்த வெளியீடு:- அர்ஜுன் நடித்த **ஆணை**

## மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)
30 முதல்இளைய தளபதி விஜய் வெடிக்கும் **சிவகாசி**
யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
விசேட காட்சியாக சிலதினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்
(சி-45593)


உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள் 13ஆம் நாள்(30-10-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.05 மணி தொடக்கம் பிற்பகல் 1. 26 மணிவரையுள்ள மிதுன லக்கினம் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்.

திரு.திருமதி கோபால் தங்கரத்தினம் தம்பதிகளின்
செல்வப் புதல்வன் திருநிறை செல்வன்
**வாமதேவன்** (வாமன் ஆசிரியர்)
அவர்களுக்கும்

திரு.திருமதி துரைராசா பரமேஸ்வரி தம்பதிகளின்
செல்வப் புதல்வி திருநிறை செல்வி
**விஜயராணி** (விஜயா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு **யாழ்.வண்ணை ஸ்ரீ கேசாவில் முத்துவிநாயகர் தேவஸ்தானத்தில்** திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் எதிர்வரும் 31-10-2005 அன்று மாலை 4.30 மணிக்கு வரவேற்பும் மணமகள் இல்லத்தில் எதிர்வரும் 02-11-2005 அன்று மாலை 4.30 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

நல்வரவை நாடும்

திரு. திருமதி நளினி மார்லன்டிக்சன்
குடும்பத்தினரும் சகோதரரும்
இல. 20, முருக மூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். T.P.: 0777 065450

(இரு வீட்டார் அழைப்பு)

திருமதி பரமேஸ்வரி துரைராசா
இல. 07, காரைக்காட்டு வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7891

(42075) (54-13-34)



உ
## தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம்
கரவெட்டி
### வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

எதிர்வரும் ஐப்பசித் திங்கள் 13ஆம் நாள் (30.10.2005) ஞாயிற்றுக் கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராண பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு மூலவர் பூசை ஆரம்பமாகி கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக.

கரவெட்டி. (சி-45969) (54-13-34) ஆலய பரிபாலன சபையினர்.

## பாராட்டுகின்றோம்



யா/சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலய
மாணவன்
செல்வன் **நடராசா விசோபன்**

2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியமையிட்டு அவரையும் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

(42080) (54-13-34) பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கல்வயல்
ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தைச்
சேர்ந்த மாணவி
செல்வி **குகன் மீரா**

2005 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரையும் அவருக்கு கல்வி போதித்த பாடசாலை அதிபர், ஆசிரியர், வகுப்பாசிரியர் திருமதி இ.சந்திரசேகரம் அவர்களையும் மீசாலை நியூ மற்ஸ் அக்கடமி ஆசிரியர் திரு. க. தவயோகராசா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

குகன் மில் கல்வயல்,
சாவகச்சேரி. (சி-2079) (54-13-34)

வாழ்த்துவோர்:
குகன் மாமா (டயலொக்).

## கணக்குப்பிள்ளை தேவை

கரவெட்டியில் பிரசித்திபெற்ற ஆலயத்திற்கு உடனடியாக ஒரு கணக்குப்பிள்ளை தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிடவசதி செய்து தரப்படும். சம்பளம் பேசித்தீர்த்துக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் தொடர்புகளுக்கு:
சதாபொன்ஸ்
அல்வாய்.

(சி-45968) (54-13-34)

## 2ஆவது வருட நினைவுகளில்

அன்னை மடியில்
30 . 06 . 1975



ஆண்டவன் அடியில்
28 . 10 . 2003

**அமரர் சோதிலிங்கம் திருக்குமார் (திரு)**
(கல்வளை, சண்டிலிப்பாய்)

சோதிலிங்கத்தின் சொத்தாய் எம் மடியில் மழலையாய்
பாசத்துடன் அரவணைக்க - எம்மை
பாரினிலே பரிதவிக்க பாதியிலே
பாசமெலாம் மறந்து ஏன் சென்றாய்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்.

தகவல்: சிறிய தந்தை.
வல்லை வீதி, சங்கானை. (42085)

## மரண அறிவித்தல்

**திருமதி விஜயலட்சுமி அம்மா இராமச்சந்திரக்குருக்கள்**
(பாப்பா)



அவர்கள் நேற்று (27.10.2005) வியாழக் கிழமை மலேஷியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் பிரம்மஸ்ரீ ச.க.இராமச்சந்திரக் குருக்கள் (மலேஷியா, முன்னாள் பிரதமகுரு, வல்லிபுராலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சாரங்கன் (பிரான்ஸ்), ரோகினி (சுவிஸ்), காருண்யா (மலேஷியா), ஆகியோரின் பாசமிகு தாயும் சகிதரசர்மா (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்துயரம் நிறைந்த செய்தியினை அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வல்லிபுராலயம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (42071) (54-

தகவல்:
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு
தொ. பே: 2263380

## தமிழர் தாயகப் பிரதேச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுக்களைத் தனித்தனியாகத் தாக்கல் செய்தனர்.

[illegible] மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் [illegible], நீதியரசர்கள் நிஹால் ஜெய சிங்க, [illegible] காமினி அமரதுங்க ஆகியோர் கொண்ட மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுக்கள் தொடர்பான வழக்குகளில் தங்களையும் எதிர்மனுதாரராக சேர்த்துக் கொள்ளும்படி கோரி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம் ஆகிய தரப்புகள் உட்பட சிலரால் இடையீட்டு மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த மனுக்களும் நேற்று உயர்நீதிமன்றில் ஒரே சமயத்தில் எடுக்கப்பட்டன.

அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மேற்படி தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுபவர் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இடையீட்டு மனுக்கோரிக்கையையும் ஏற்று அவரை இவ்வழக்குகளில் எதிர் மனுதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள அனுமதித்தது.

அதேவேளை, ஏனைய தரப்புகளின் இடையீட்டு கோரிக்கை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதலாம் எதிர்மனுதாரரான தேர்தல் ஆணையாளரின் சார்பில் ஆஜராகிய பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சமிந்தர பெர்ணாண்டோ, தேர்தல் ஆணையாளரின் கடிதம் ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

அக்கடிதத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்களுக்கான கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் எல்லையிலிருந்து 500 மீற்றர் தொலைவுக்குள் அமைக்கப்படவுள்ளன எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். இந்த வாக்காளர்களுக்குமாக அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நீதியானதும் நியாயமானதுமாகத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர், இது குறித்து வேட்பாளர்கள் அனைவருக்கும் கடந்த 21 ஆம் திகதி தாம் நேரடியாக விளக்கமளித்திருக்கிறார் எனவும் அதில் தெரிவித்திருந்தார்.

இந்த விளக்கங்களையடுத்து இடைக்கால உத்தரவு எதையும் விடுப்பதற்கு மறுத்த உயர்நீதிமன்றம், வழக்கை நவம்பர் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

மனுதாரரான நெல்ஸன் பெரேரா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக டி.எஸ். விஜய சிங்க, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரும் -

விமல் கீகனகே சார்பில் சட்டத்தரணி மனோகரா டி சில்வாவும்-

இடையீட்டு மனுதாரரான ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.என் சொக்ஸியும்-

மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் சார்பில் சட்டத்தரணி சஞ்சீவ் ஜெயவர்த்தனவும் ஆஜராகியிருந்த னர். (எ-க-7)

BRIGHTMAN
பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்.நகர்.
சரளமாக உரையாட
புதிய பிரிவு சிங்களம்
By.லீலாகிருஸ்ணன்
ஆரம்பம்: 29.10.2005
Sat., 5.00 p.m.
(Sat., Sun. - 5.00)

அறிவொளி - நல்லூர்
திரு. ம. ஸ்பெல்மன்
Physics A/L 2007
வினா விடை
ஆரம்பம்: 29.10.2005 சனி 3.30 – 4.30 p.m.

CHEMISTRY Group Class
* ORGANIC மீட்டல் Sat., Sun. - 4.30 p.m.
* அயன் சமநிலை Sat., Sun. - 5.15 p.m.
* Gases - Tu., We., Th. - 6.30 a.m.
DIAS B.Sc. (Hons) Spl. Chem.
நாவலர் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

## பேசித்தீர்க்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தமை, தேர்தலுக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் மஹிந்தவின் கொள்கைகள் என்பன தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் இது தொடர்பில் பகிரங்க விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முக்கியத்துவமானதாகக் கருதப்படும் விவகாரங்கள்

குறித்துப் பேசுவதற்காக ஜனாதிபதியிடம் நேர அனுமதியொன்றைக் கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் அதற்கு ஜனாதிபதியிடமிருந்து பதிலெதுவும் கிடைக்கவில்லையென தெரியவருகிறது.

ஜனாதிபதியுடன் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் கைகூடாமல் இருப்பது குறித்தும், ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நேர அனுமதி கிடைக்காமை குறித்தும் பிரதமர் தமக்கு நெருக்கமானவர்களிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. (எ-க)

## மங்களவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

'மஹிந்தவின் சிந்தனை' என்ற தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதியின் முழுமையான அனுமதியை கடுந்தொனியில் பெற்றே வெளியிடப்பட்டது எனக் கடந்த வார இறுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் சிவில் விமான சேவைகள், துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்த விடயம் தொடர்பில் தொலைபேசியூடாக அமைச்சர் மங்கள சமரவீரவிடம் தனது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. அமைச்சரின் அந்தக் கூற்றைத் தான் முற்றுமுழுதாக நிராகரித்திருக்கிறார் எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தாம் அங்கீகரிக்கவில்லையென்று அமைச்சர் மங்களவிடம் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இந்த விடயத்திலுள்ள உண்மை நிலையினை மக்களிடம் எடுத்துக் கூறுமாறு பணித்திருக்கிறாரெனத் தெரியவருகிறது. (எ-க)

## இங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையை உருவாக்கவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பொலீஸாருக்கு இத்துறையில் போதிய பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்க அமெரிக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனைச் செயல்படுத்தும் வகையில் இலங்கை அரசுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரின் இந்த சிபார்சுகளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. - எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-க)

## திருமலையில் இளைஞர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்றார்கள் என்று கூறப்படும் சிலரே இவரைச் சுட்டுக்கொன்றனர் என்று பொலீஸார் கூறினர். உவர்மலை, கோணேசபுரம் என்ற இடத்தில் உள்ள வைரவர் கோயிலடியில் கிடந்த இவரின் சடலம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் தலையில் மூன்று சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க-7)

A/L கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு
ஓர் இன்ப அதிர்ச்சி
விவரம்
நாளைய உதயனில்
(42069) (25-34-12)

# ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பிரியராகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் ரணில் மஹிந்தவைவிட மிகவும் ஆபத்தானவர். புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டவுடன் அவர் 'புலிகளை [illegible]தம் எடுக்காமல் செய்து விட்டோம். சிங்கள வீரனின் இறப்பைத் தடுத்துநிறுத்தியுள்ளோம். புலிகளுக்கு எதிராக சர்வதேச வலையைப் பின்னியுள்ளோம். இதன் விளைவுகள் போகப்போகத் தெரியும்' என்று கூறினார். ஆகவே,தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அவர் ஒப்பந்தம் செய்யவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ரணில் விரித்த சர்வதேச வலைப்பின்னல் எம்மை நெருக்கியது உண்மை. கிழக்கிலே நடந்த துர்ப்பாக்கிய சம்பவங்களும் அவர் விரித்த வலைப்பின்னலின் அம்சமேயாகும்.

எமது தீர்க்க தரிசனமுள்ள தலைமையின் திறனினால் எமக்கு வைக்கப்பட்ட பொறிகளில் நாம் இதுவரை சிக்கவில்லை. இந்த அனுபவங்களுக்குப் பிறகும் தமிழர் தேசம் ரணிலின் 'கனவான் நடிப்பில்' ஏமாறப் போகிறதா? நுனிப்புல் மேய்பவர்போல அரசியல் தீர்வுபற்றிப் பேசும் ரணிலின் பொருளாதாரத் திட்டமிடல்களும்கூட எமது விடுதலைப் போரைப் பயன்படுத்தி அதனால் விளைந்திருக்கும் சர்வதேசச் சூழலைப் பயன்படுத்தி மேற்கு நாடுகள் வழங்கப்போகும் உதவிகளை அடிப்படையாகக் கொண்டவை மட்டுமேயாகும். அவர் தமிழர் தேசத்தை மட்டுமல்ல, இலங்கைத்தீவு முழுவதையும் அந்நியர்களிடம் அடகுவைத்து விட்டே ஆட்சி நடத்துவார்.

ஆகவே, தமிழீழ மக்களே, எச்சரிக்கையாக இருங்கள்! மஹிந்த, ரணில் இருவருமே கோழிபிடிப்பவர்கள் தான். மஹிந்தவுடன் 'செந்தோழர்களும்', காவியுடையினரும் கதறக் கதறக் கலைத்துப் பிடிப்பார்கள். ஆனால், ரணில் ஈரச்சாக்குப் போட்டுப் பிடிப்பார்.

இவர்களுக்கா நாம் வாக்களிக்கப் போகின்றோம்?

எனவே,எமது இனிய மக்களே!

2005 நவம்பர் ஸ்ரீலங்கா அரசுத் தலைவர் தேர்தலைப் பகிஷ்கரித்து தமிழர் தேசம் சிங்களத் தலைவர்களை இனியும் நம்பத் தயாரில்லை என்ற செய்தியை சர்வதேசத்துக்கு எடுத்துரைக்கத் தயாராகுங்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த தேர்தலில் ஈழத் தமிழர்கள் வாக்களித்ததற்கான காரணத்தை விளக்கியுள்ள மாணவர் அமையம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கக் காரணம் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளது. (ஒ)

## தென்னிந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

நீர் நிலைகள் நிரம்பிவழிகின்றன இதனால் வெள்ளப்பெருக்கு அபாயம் காரணமாக நீர் நிலைகளின் அண்மித்த பகுதிகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கானோர் வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(9)

## வவுனியாவில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட தற்காலிக அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் உட்பட பல அரச அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முன்னதாக ஈகச்சுடரினை மாவீரர் மகேந்திரனின் மனைவி திருமதி மகேந்திரன் இராஜேஸ்வரி ஏற்றினார். தேசி யக் கொடியினை மாவீரரின் தந்தையார் பூ. கந்தையா ஏற்றினார். தொடர்ந்து பொதுச் சுடர்களை, வந்திருந்த சிறப்பு பிரதிநிதிகள் ஏற்றினார்கள். இதனைத் தொடர்ந்து விழா ஆரம்பமானது.

நிகழ்வை முன்னிட்டு இராணுவத்தினரும், பொலீஸாரும் வவுனியா நகரிலும் அண்டிய பிரதேசங்களிலும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். வீதியால் சென்று வந்தவர்கள் சோதனையிடப்பட்டனர். எனினும் எந்த விதமான பிரச்சினைகளும் இடம் பெறவில்லை.

எழுச்சி நிகழ்வையொட்டி ஏ-9 வீதியை இரவு எட்டுமணிவரை திறந்து விடுவதாக படையினர் முன்னர் தெரிவித்திருந்த போதும் மாலை 5.30 மணிக்கே இராணுவத்தினர் சோதனை சாவடியினை மூடிவிட்டனர். இதன் காரணமாக வன்னி பகுதியில் இருந்து வருகை தந்திருந்த மக்கள் நேற்றிரவு வவனியாவிலேயே தங்கவைக்கப்பட்டனர். (எ-7-9-164)

## தமிழீழத் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதலோடும் நெறிப்படுத்தலோடும் கடந்த கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வந்த விடுதலைப் போராட்டத்தினூடாக ஈழத் தமிழர் தாயகத்தில் ஒரு நடைமுறை அரசு நிறுவப்பட்டுள்ளது.

அதை நிலைநிறுத்துகின்ற வகையில் தேசியக்கொடி, தேசிய மலர் என்பன ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆயினும், தேசியப் பண் ஆக்கப்படாத நிலையில், எமது கொடி வணக்கப் பாடலையே தேசியப் பண்ணுக்கு மாற்றாக நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

தேசியப் பண் இன்றைய சூழலில் காலத்தின் இன்றியமையாத் தேவையாகிவிட்டது. எதிர்காலத்தில் மீக்குயர் பண்ணாக ஒலிக்கவிருக்கும் தமிழீழத் தேசியப் பண்ணினை ஆக்கும் அருமுயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற எமது இனிய தமிழுறவுகளை அன்புடன் அழைக்கின்றோம்.

தேசியப் பண்ணினை ஆக்க முனைவோர் தேச விடுதலைக்கான வேட்கைக்கும் தாயகம் பற்றி அவர்கள் கொண்டிருந்த எதிர்பார்க்கைக்கும் உயிர்கொடுக்கும் வகையில், துள்ளல் நடையில் மிடுக்கோடு கூடியதாகத் தேசியப் பண்ணினை ஆக்குதல் வேண்டும்.

எமது தாயகத்தின் சிறப்பு, பெருமை, வளம் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற வகையில் அழைக்கப்படும் தேசியப் பண் ஈழத் தமிழர்களின் விடுதலை வேட்கையையும் அதற்கு எம்மினம் கொடுத்த விலைகளையும் எமது வழித்தோன்றல்களின் நினைவில் நிலைநிறுத்தக் கூடியதாக பிறமொழிக் கலப்பற்றதாக அமைதல் வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## யாழிலிருந்து சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட இவர்கள் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பெரியளவிலான படத்தையும் புலிக்கொடிகளையும் தாங்கி வந்தனர்.

முகமாலைச் சோதனைச் சாவடியூடாக அவர்கள் மேற்கொண்டு பயணிக்க அனுமதித்த படையினர், ஓமந்தைச் சோதனைச் சாவடியில் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். பிற்பகல் 3.30 மணியளவில் அவர்கள் ஓமந்தைச் சாவடியை வந்தடைந்தனர். அங்கிருந்து மேற்கொண்டு செல்லமுடியாது என்று படையினர் தெரிவித்துவிட்டனர்.

இதனால், இளைஞர்கள் அங்கேயே அமர்ந்து அஹிம்சை வழியில் போராடினர். ஆனால், இராணுவத்தினர் அசைந்து கொடுக்கவில்லை. விடயத்தை அறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈழவேந்தன், சிவனேசன், கனகரட்னம், ஆகியோர் ஓமந்தைக்கு விரைந்தனர். இராணுவத்தினருடன் பேச்சு நடத்தினர். இளைஞர்களை வவுனியா நகருக்குள் அனுமதிக்குமாறு வாதாடினர். படையினர் மசிந்து கொடுக்கவில்லை.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஈழவேந்தன் எம்.பி.:-

"நாங்கள் எவ்வளவு தூரம் வாதாடிய போதும் இராணுவத்தினர் விட்டுக்கொடுக்கவில்லை. தலைவர் பிரபாகரனின் படத்தை அவர்கள் கொண்டு வந்துள்ளனர் என்பதால் அவர்களை உள்ளே நுழைய முடியாது என்று படையினர் கூறினர். இது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று நான் தெரிவித்தேன். நாங்களும் தான் பிரபாகரனின் படங்களை சட்டையில் குத்தியுள்ளோம் என்பதால் எங்களையும் தடுத்து விடுவீர்களா என்று கேட்டேன். அதன் பின்னும் அவர்கள் கீழிறங்கி வரவில்லை." - என்று தெரிவித்தார்.

வவுனியாவில் நிகழ்வு ஆரம்பித்து விட்டது என்பதால், அதில் கலந்துகொள்வதற்காக மாலை 5.45 மணியளவில் தாம் அங்கிருந்து புறப்படும் வரையும் இளைஞர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தனர் என்றும் அவர் கூறினார். (எ-7-9-164)

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிடெல் G.S.M மேசைத் தொலை பேசிகள் பூட்டித்தரப்படும். டயலொக் 500/= மொபிட்டெல் 300/= பைக்கேஜ் இணைப்புக்களுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

ரூ. 900/= மட்டும
தொடர்புகளுக்கு:
பவர் செல்லூலர் ட்ரேடிங் கம்பனி
205/01, கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
T.P:-07112-399220,0714-182500,0773518330

கணக்கீடு
A/L 2006
கம்பனி
முடிவுக் கணக்கு
சனி - 4.30 p.m.
A/L 2007
தனி வியாபார
முடிவுக் கணக்கு
சனி - 3.30 p.m.
A/L Day Class
கம்பனி சனி 10 a.m.
பங்குடமை ஞாயிறு 11am.
S.தவா
B.Com (Hons), (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
(42037) JAFFNA (25-34-12)

## மரண அறிவித்தல்

### கைலாயபிள்ளை தியாகராஜா (தியாகு)



யாழ்.கிடாய்விழுந்தானைப் பிறப்பிடமாகவும் வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை தியாகராஜா (தியாகு) நேற்று (27.10.2005) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை.

(சி-45971) (25-34-12)

தகவல்:
தி.ராகுலன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.